வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ——— ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com   மலர் : 06   25.01.2025 சனிக்கிழமை   இதழ் : 25   பக்கங்கள் : 12

# வடமாகாண அபிவிருத்திக்கு சுவிற்ஸர்லாந்து முழு ஆதரவு!

## ஜனாதிபதியின் செயலாளரிடம் தெரிவித்தார் அந்நாட்டு தூதுவர்



கொழும்பு, ஜனவரி 25

**வடக்கு அபிவிருத்தி, தேசிய ஒற்றுமை மற்றும் ஏனைய சமூகப் பிரச்னைகளுக்கான தீர்வுகளுக்கு இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதற்கும் தேவையான உதவிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் சுவிற்ஸர்லாந்து தூதுவர் சிறி வோல்ட் தெரிவித்தார்.**

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் சுவிற்ஸர்லாந்து தூது வர் சிறி வோல்ட் ஆகியோருக்கிடை யிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன் போதே தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டின் சொத்துக்களை மீட்பதற்கு எடுக்கவேண்டிய சர்வதேச நடவடிக்கைகள் குறித்து சுவிற்சர்லாந்து தூதுவர் இதன் போது வழிகாட்டுதல் வழங்கியதுடன் இதற்காக பூர்வாங்க வசதிகளை வழங்கத் தேவையாயின் எந்த நேரத்திலும் அதற்கு உதவி வழங்க அவர் உடன்பாடு தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப் படும் ஊழல் எதிர்ப்புத் திட்டத்துக்கு (11)

# சிறைக்குள் கைதிக்கு ஹெரோயின் வழங்க முயன்ற பெண் சிக்கினார்!

## வவுனியா சிறைச்சாலையில் சம்பவம்

- குமார கோகுலன் -

வவுனியா, ஜன. 25

வவுனியா சிறைச்சாலைக்குள் உள்ள கைதி ஒருவருக்கு ஹெரோயின் வழங்க முற்பட்ட 28 வயது குடும்ப பெண் ஒருவரை நேற்று கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் குற்றச் செயல் தொடர்பில் கைது செய்யப்பட்டு வவுனியா சிறைச்சாலையில் (11)

# வவுனியா சுந்தரபுரத்தில் ஒருவர் வெட்டிக் கொலை!

வவுனியா, ஜன. 25

வவுனியா மாவட்டம் சுந்தரபுரம் பகுதியில், குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சுந்தரபுரம் பகுதியில் வசித்து வந்த ஒரு பிள்ளையின் தந்தையான 28 வயதுடைய சுந்தரலிங்கம் சுகந்தன் இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த தீபாவளி தினத்தன்று தனது மாமியாரை துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்திய (11)

# விசுவமடு விஸ்வநாதர் மாணவன் மாகாண மட்டத்தில் முதலாமிடம்


முல்லைத்தீவு, ஜன. 25

முல்லைத்தீவு விசுவமடு விஸ்வநாதர் ஆரம்பப் பாடசாலை மாணவன் கிசோதரன் அக்ஷயன் மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் முதல் இடத்தைப் பெற்றுள்ளார்.

விசுவமடு பகுதியைச் சேர்ந்த மாணவன் 186 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கும் வடக்கு மாகணத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இந்த மாணவனை நேற்று பாடசாலை அதிபர் மற்றும் வகுப்பு ஆசிரியர் ஆகியோர் கௌரவித்தனர்.

அத்துடன், இவருடன் பரீட்சைக்குத் (11)



# வரலாற்றில் முதன் முறையாக பாராளுமன்றில் பொங்கல் விழா

கொழும்பு, ஜன. 25

பாராளுமன்றில் முதன்முறையாக தைப்பொங்கல் நிகழ்வு நேற்று இடம்பெற்றுள்ளது.

புத்த சாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் வழிகாட்டலில், சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் தைப்பொங்கல் நிகழ்வு நேற்று காலை பாராளுமன்ற வளாகத்தின் முன்பாக இடம்பெற்றது.

விசேட பூசை வழிபாடுகளை தொடர்ந்து பொங்கல் நிகழ்வு இடம்பெற்று கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்றப் பணியாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்:

# எதிரணி தமிழ், முஸ்லிம் எம்.பிகளை சந்தித்த வடக்கு மீனவர் பிரதிநிதிகள்!

கொழும்பு, ஜன. 25

இந்திய மீனவர்களின் அத்துமீறலால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக தெரிவித்து, வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மனோ கணேசன் ஆகியோருடன் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சந்திப்பை மேற்கொண்டனர்.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியிலுள்ள இலங்கை தமிழ் அரசுக் கட்சி எம்.பிக்களின் ஓய்வறையில் நேற்று பகல் இந்த சந்திப்பு நடந்தது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி, அகில (11)

# அதானி காற்றாலை திட்டம் இரத்து செய்யப்படவில்லை!

கொழும்பு, ஜன. 25

மன்னார் மற்றும் பூநகரியில் அமையவுள்ள அதானியின் மின் திட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக வெளிவரும் செய்திகள் தவறானவை என அதானி குழுமம் தெரிவித்துள்ளது.

விசேட ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு அதன் பேச்சாளர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கை வருமாறு-

திட்டம் இரத்து செய்யப்பட்டதாக வெளிவந்த (11)

# பாதுகாப்பு பிரிவை மீண்டும் வழங்க உத்தரவிடவேண்டும்!

## உயர்நீதிமன்றத்தில் மகிந்த மனு தாக்கல்

கொழும்பு, ஜன. 25

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தனது பாதுகாப்புப் பிரிவை மீண்டும் வழங்க உத்தரவிடக் கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள் உட்பட ஒரு குழுவினர் பிரதிவாதிகளாகப் (11)

# 4 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து யாழ்.பல்கலை மாணவர்கள் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் 09 பேருக்கு விதிக்கப்பட்டுள்ள வகுப்புத்தடைகளை நீக்கவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து மாணவ ஒன்றிய பிரதிநிதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக முன்றலில் நேற்று முதல் மாணவ ஒன்றிய பிரதிநிதிகள் (11)

# மூன்றாவது தடவையாக மாறியது யாழ்.கலாசார மையத்தின் பெயர்!





யாழ்ப்பாணம், ஜன. 25

இந்திய நிதியுதவியில் யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்டுள்ள யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம் தற்போது மூன்றாவது முறையாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த நிலையம், தற்போது யாழ்ப்பாணம் திருவள்ளுவர் (11)

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விவசாய நவீனமயமாக்கல் செயல்திட்ட அறுவடை விழா நேற்று கிளிநொச்சியில்!

கிளிநொச்சி, ஜன. 25

நெற்செய்கையில் விவசாய நவீனமயமாக்கல் கிராமங்களை உருவாக்கும் முன்மாதிரி செயற்திட்ட அறுவடை விழா நேற்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது. குறித்த நிகழ்வு நேற்று காலை 8 மணியளவில் கிளிநொச்சி மகிழங்காடு பகுதியில் இடம்பெற்றது.

கொமர்ஷல் வங்கியின் ஏற்பாட்டில் குறித்த நெற்செய்கையில் விவசாய நவீனமயமாக்கல் கிராமங்களை உருவாக்கும் முன்மாதிரிச் செயற்திட்டமானது யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடம் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த செயற்திட்டத்தின் அறுவடை நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் பொது முகாமையாளர் டிலக்சன் ஹெட்டியாராச்சி, கிளிநொச்சி மாவட்டபதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன், யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர், விவசாய திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள், பொறியியலாளர்கள், யாழ் பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்கள், விவசாயிகள், வங்கி ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் மங்கள வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானதுடன், வரவேற்பு நடனமும் இடம்பெற்றது.

தொடர்ந்து அறுவடை நிகழ்வு இடம்பெற்றது. பாரம்பரிய முறையில் புதிர் எடுத்து வரப்பட்டு பொங்கலிடப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நவீன விவசாய முறையில் இயந்திரங்கள் மூலம் நாற்று நாட்டப்பட்டு, ட்ரோன் மூலம் மருந்து விசிறப்பட்டு நவீன நடுகை விவசாய முறையில் குறித்த செய்கை மேற்கொள்ளப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(அ)

# வடக்கு நோக்கி படையெடுக்கும் புலம்பெயர் முதலீட்டாளர்கள்!

## ஆளுநர் வேதநாயகன் வரவேற்பு

யாழ்ப்பாணம்,ஜன.25

தற்போதைய சூழலில் வடக்கு மாகாணத்தை நோக்கி பல்வேறு புலம்பெயர் முதலீட்டாளர்கள் வருகின்றனர். அவர்களை வரவேற்பதுடன் இன்னமும் அதிகமான முதலீடுகள் எமது மாகாணத்தை நோக்கி வரவேண்டும். இதன் ஊடாக எமது பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கப்பெற வேண்டும் என வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நேற்று ஆரம்பமானது. இதனை முன்னிட்டு ரில்கோ ஹோட்டலில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"30 ஆண்டு காலப் போர் காரணமாக வடக்கு மாகாணம் பலவற்றை இழந்துள்ளது. தொழில்துறை, வேலை வாய்ப்பு என்பனவும் அதனுள் அடங்குகின்றன. எமது பகுதியைப் பொறுத்தவரையில் அரசாங்க வேலை மாத்திரமே இருந்து வந்தது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் 2009ஆம் ஆண்டிலிருந்து இங்கு முதலீடு செய்வதற்கு பலர் வந்தாலும் அவர்களில் பலர் திரும்பிச் சென்றுள்ளனர். பல்வேறு காரணங்களால் அவர்கள் முதலீடு செய்யவில்லை. ஆனால், கடந்த ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுடன் சூழல் மாறியுள்ளது.



முதலீட்டாளர்கள் இங்கு வருகின்றார்கள்.

புலம்பெயர்ந்தவர்கள் அதிகமாக முதலிட விரும்புகின்றனர்.

போருக்கு முன்னர் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி விவசாய மற்றும் மீன்பிடி உற்பத்திப் பொருட்கள் விற்பனைக்குச் சென்றனவோ அதேபோல மீண்டும் நிலைமை ஏற்படும் சூழல் தெரிகின்றது. விவசாய மற்றும் மீன்பிடி உற்பத்திப் பொருட்களை பெறுமதி சேர் பொருட்களாக மாற்றி ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் எமக்கு அதிகரிக்கின்றன. இதன் ஊடாக எமது பகுதியைச் சேர்ந்த பலர் வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள முடியும்.

அதேபோன்று, தொழில் நுட்பங்களையும் நவீன இயந்திரங்களையும் எமது உற்பத்திப் பொருட்களையும் பெருக்குவதற்குப் பயன்படுத்த வேண்டும். சகல வழிகளிலும் சாதகமான சூழல் நிலவும் நிலையில் அதனைப் பயன்படுத்தி எமது மாகாணத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்"- என்றார்.

(எ-05)

# 128 கிலோ மாட்டிறைச்சியுடன் வாகனம் கைப்பற்றிய பொலிஸ்

## வவுனியாவில் இருவர் கைது



வவுனியா, ஜன. 25

வவுனியா - நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 4ம் கட்டை பகுதியில் 128 கிலோ மாட்டிறைச்சியுடன் வாகனம் ஒன்றினை பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் இருவரை கைது செய்துள்ளனர்.

நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி. எம்.பி.ஆர்.கே திவுல்வெவ தலைமையிலான பொலிஸ் குழுவினர் நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் திடீர்ச் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது பட்டா ரக வாகனத்தை சோதனைக்குட்படுத்தியபோது கொள்கலன்களில் 128 கிலோ மாட்டிறைச்சியை முறையற்ற முறையில் கொண்டு சென்றமைக்காக வாகனத்தை கையப்படுத்தியதுடன் சாரதி உட்பட இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர், கையப்படுத்தப்பட்ட 128 கிலோ மாட்டிறைச்சி, பட்டா ரக வாகனம் என்பவற்றுடன் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(அ)

# பெண்களை தாக்கி கைபேசி கொள்ளை; இருவரைத் துரத்திப் பிடித்த பொலிஸார்

வவுனியா, ஜன. 25

வவுனியா ஓமந்தை ஏ-9 வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பெண்களை தொடர்ந்து வந்த இளைஞர்கள் இருவர் குறித்த பெண்களை வழிமறித்து தாக்கியதுடன் அவர்களிடம் இருந்த ரூபா 7 இலட்சம் பெறுமதியான கையடக்க தொலைபேசியை பறிமுதல் செய்துள்ளனர்.



பாதிக்கப்பட்ட பெண்கள் வன்னி பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபரின் அவசர இலக்கமான 107 இற்கு தொடர்பு கொண்டு முறையிட்டதை அடுத்து உடனடியாக செயல்பட்ட ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த இளைஞர்களை அடையாளம் கண்டு ஓமந்தை சேமமடுப் பகுதியில் துரத்திப் பிடித்துள்ளனர்.

கைது செயப்பட்ட இருவரும் கிளிநொச்சி பகுதியை சேர்ந்த 29 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(அ-10)

# யாழில் ஆரம்பமாகியது உலக ஊடக புகைப்படக் கண்காட்சி!

யாழ்ப்பாணம், ஜன. 25

நெதர்லாந்து தூதரகத்துடன் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் இணைந்து நடத்தும் உலக ஊடகப் புகைப்படக் கண் காட்சி நேற்று யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் ஆரம்பமாகியது. நேற்று ஆரம்பமான இந்த கண்காட்சி 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் காலை 10:00 மணி முதல் இரவு 07:00 மணி வரை இப்புகைப் படக் கண் காட்சி இடம்பெறவுள்ளது.

புகைப்பட ஊடகவியலில் சர்வதேச விருதுகளை வென்ற புகைப்படங்கள் உட்பட புகைப்படத்தினூடு கதை சொல்லும் பல புகைப்படங்கள் இந்தக் கண்காட்சியில் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் தமிழர் பாரம்பரிய முறைப்படி மயிலாட்டம், குதிரையாட்டத்துடன் அழைத் துவரப்பட்டனர். அதனைத் தொடர்ந்து விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்ற பின்னர் நாடா வெட்டி வைக்கப்பட்டு புகைப்பட கண்காட்சி ஆரம்பமாகியது.

இலங்கைக்கான நெதர்லாந்து தூதரகத்தின் ஏற்பாட்டில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக இலங் கைக்கான நெதர்லாந்து தூதரகத்தின் பிரதித் தூதுவர் தூதுவர் கலந்து சிறப்பித்ததுடன், யாழ். இந்திய துணைத் தூதுவர் சாய்முரளி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆ. சுமந்திரன், நெதர்லாந்து தூதரகத்தினர் மற்றும் பார்வையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
25.01.2025 சனிக்கிழமை
பிலவ வருடம், தை 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

**தொலைபேசி : 021 205 2300**

## சாதாரண மனிதர்களின் ஆட்சி

தேசிய மக்கள் சக்தியின் அமைச்சரும் ஜே.வி.பியின் முக்கிய முகங்களில் ஒருவருமான விமல் ரத்தநாயக்க, எதிர்க்கட்சியினரை நோக்கி ஒரு விடயத்தை குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது, சாதாரண மனிதர்களின் பிள்ளைகள் இன்று நாட்டின் முக்கிய ஆட்சிப் பொறுப்புக்களை வகிக்கின்றனர் - அதனை வரவேற்க வேண்டுமே தவிர, விமர்சிக்கக் கூடாது.

இந்தக் கூற்றில் கணிசமான உண்மை இருக்கின்றது ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைவரும் சாதாரண மனிதர்களின் பிள்ளைகள் இல்லை. இதற்கு பிரதமர் ஹரிணி அமரசூரிய ஒரு சிறந்த உதாரணம். ஆனால், ஒப்பீட்டடிப் படையில் இதுவரையில் கொழும்பின் உயரடுக்கின் மேலாதிக்கத்திற்குள் சிறையுண்டிருந்த அதிகார மையம் சாதாரணமானவர்களை நோக்கி நகர்ந்திருக்கின்றது என்பது உண்மைதான். அந்த வகையில் ஒப்பீட்டடிப்படையில் சாதாரண மனிதர்களின் பிள்ளைகளின் அரசாங்கம் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை கூறுவதில் தவறில்லைதான் - சில மட்டுப்பாடுகள் இருந்தாலும் கூட.

ஈழத் தமிழர் அரசியலும் ஆரம்பத்தில் யாழ் குடாநாட்டின் அப்புக்காத்துக்களின் வசம்தான் இருந்தது. அவர்கள் செல்வம் படைத்தவர்களாகவும், ஆங்கில வழிக் கல்வி கற்றவர்களாகவும் இருந்தனர். ஆனால் ஈழ அரசியல் ஜனநாயக வழியிலிருந்து ஆயுதப் போராட்டமாக பரிணமித்த காலத்தில்தான், சாதாரண மனிதர்களின் பிள்ளைகள் ஈழத் தமிழர் அரசியலுக்குள் வர முடிந்தது. இந்த அடிப்படையில் நோக்கினால் தமிழர்கள் மத்தியிலும் சிங்களவர்கள் மத்தியிலும் ஆயுதப் போராட்டமே சாதாரண மனிதர்களை அரசியலுக்குள் கொண்டு வந்தது. ஒரு வேளை ஆயுதப் போராட்டம் என்று ஒன்று தமிழர்கள் மத்தியில் தோன்றாது இருந்திருந்தால் சட்டமும் ஆங்கிலமும் தெரியாதவர்கள் தவறியும் நாடாளுமன்றம் சென்றிருக்க மாட்டார்கள்.

ஆங்கிலம் தெரிந்த அப்புக்காத்துக்களின் தோல்வி அரசியலே சாதாரணமானவர்கள் அரசியலுக்குள் பிரவேசிப்பதற்கான கதவை அகலத் திறந்துவிட்டது. ஆனாலும் விடுதலைப் புலிகளின் தோல்வியைத் தொடர்ந்து நிலைமைகள் மாறிவிட்டன. ஜே.வி.பி ஆயுத நடவடிக்கையில் தோல்வியுற்றாலும் கூட அரசியலில் தங்களை மீளவும் கட்டியெழுப்பிக் கொண்டனர். ஆனால், தமிழ் இயக்கங்கள் எவற்றாலும் அது முடியவில்லை. இந்த இடைவெளியில்தான் இலங்கை தமிழ் அரசுக் கட்சி தப்பித்துக் கொண்டது.

ஆங்கிலமும் சட்டமும் தேவையில்லையா என்றால் நிச்சயம் தேவை. ஆனால், அவற்றுடன் மட்டும் அரசியலை மட்டுப்படுத்திவிட முடியாது என்பதுதான் விடயம். ஏனெனில், அவ்வாறானவர்கள் அனைவருமே படுதோல்வியையே மக்களுக்கு கொடுத்துச் சென்றிருக்கின்றனர். ஜி.ஜி.பொன்னம்பலம் தொடக்கம் செல்வநாயகம் வரையில் எதனையும் அடைய முடியவில்லை. அவர்கள் போட்ட அடித்தளத்தில் அவர்களை பின் தொடர்ந்தவர்களாலும் எதனையும் நிரூபிக்க முடியவில்லை. இறுதியில், மாகாண சபையைத் தவிர்த்து நோக்கினால், ஆயுதப் போராட்ட வழிமுறையும் எதனையும் சாதிக்கவில்லை - ஆனாலும் ஒரு மாகாண சபையாவது எஞ்சியிருக்கின்றது என்றால் அது சாதாரண தமிழ் பிள்ளைகளின் உயிர் கொடைகளின் விளைவுதான்.

அறிவு இருக்குமளவிற்கு சாதாரண மக்களின் துயரங்களையும் அன்றாட வாழ்வியல் நெருக்கடிகளையும் புரிந்து கொள்ளக் கூடிய அரசியல்வாதிகள்தான் இன்றைய தேவையாவர். இன்றும் சமஷ்டி, வடக்கு கிழக்கு இணைப்பு - இப்படியெல்லாம் பேசிக் கொண்டு, சாதாரண மக்களுக்கு அன்றாட வாழ்வில் நம்பிக்கையைக் கொடுக்க முடியாதவர்களாவே தமிழ் அரசியல்வாதிகள் இருக்கின்றனர். இதன் காரணமாகத்தான் மக்கள் தேசிய கட்சிகளை நோக்கி சிதறிக் கொண்டிருக்கின்றனர்.

# நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் புதிய கட்டடத் திறப்பு, இசை விழா



யாழ்ப்பாணம், ஜன.24

புலம்பெயர் உறவுகள் மற்றும் கலைஞர்களின் ஆதரவுடன் புனரமைக்கப்பட்ட நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவும் இசை விழாவும் இன்று 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இதில், முதல் நாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை காலை 09 மணி முதல் மன்ற கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இளங்கலைஞர் மன்றத் தலைவரும் வடக்கு மாகாண அவைத்தலைவருமான சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் -

பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளியும், கௌரவ விருந்தினர்களாக இளஞ்கலைஞர் மன்ற காப்பாளர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், ஈழத்தின் மூத்த இசையமைப்பாளர் இசைவாணர் மு. கண்ணன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மாலை நிகழ்வுகள் 04 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. இதில், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன், யாழ். போதனா மருத்துவமனை மருத்துவ நிபுணர் எஸ். சிவன்சுதன், சிரேஷ்ட விரிவுரையாளர் க. பரமேஸ்வரி ஆகியோர் கலந்து கொள்வர். சிறப்பு நிகழ்வாக இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த இசைப் பேரொளி எஸ். மகதி (பாட்டு), நெல்லை ந. ரவீந்திரன் (வயலின்), எஸ். திவ்யரூபசர்மா மிருதங்கம், அனிருத் அத்றியா (கெஞ்சிரா) ஆகியோர் பங்கேற்கும் இசையரங்கு நடைபெறவுள்ளது. (எ)

# யாழில் நேற்று ஆரம்பமானது சர்வதேச வர்த்தக கண்காட்சி



யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத்தின் ஏற்பாட்டில், 15ஆவது ஆண்டாக நடைபெறும் யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியானது 'பொருளாதார முன்னேற்றத்துக் கான வடக்கின் நுழை வாயில்' எனும் தொனிப் பொருளுடன் முற்றவெளி மைதானத்தில் நேற்றுக் காலை 11 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் உத்தியோகபூர்வமாக கண் காட்சியை திறந்துவைத்தார்.

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் 350இற்கு மேற்பட்ட காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட் டுள்ளன. விவசாயம், தொழில்நுட்பம், விருந்தோம்பல், கல்வி, உணவு , நவநாகரிகம் மற்றும் இதர தொழில் துறைகள் என பல்வேறுபட்ட வர்த்தக நிறுவனங்களின் பொருட்கள் மற்றும் சேவைகளை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

40 வரையான சிறிய தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளுக்காக 10 காட்சிக்கூடங்கள் அமைப்பதற்கான இலவச இட ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மாலைவேளை சிறுவர்களை மகிழ்ச்சியூட்டும் நோக்குடன் சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு களியாட்ட நிகழ்வுகளும் இம்முறை விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. (எ-05)

## பாடசாலை மாணவர்களுக்கு இலவச பல் சிகிச்சை முகாம்


யாழ்ப்பாணம்,ஜன.25

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தில் மாணவர்கள் மற்றும் மக்களுக்கு இலவச பல் சிகிச்சை முகாம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.


கடற்படையின் சேவா வனிதா பிரிவு மற்றும் கடற்படை பல் சேவைகள் பணிப்பாளர் ஆகியோரின் முழுமையான பங்களிப்புடனும் 'குட் நெய்பர்ஸ் பௌண்டேசனின் ஒத்து ழைப்புடன் இந்த பல் சிகிச்சை முகாம் நடைபெற்றது.

குறித்த பல் சிகிச்சை முகாமில் பாடசாலை மாணவர்கள், முள்ளியான் பொது மக்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் தமது பற்களை பரிசோதித்து, வைத்திய ஆலோசனைகள் மற்றும் ஆரம்ப சிகிச்சை என்பனவற்றை பெற்றுக் கொண்டனர். (எ- 05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**இடபம்**
சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். விலை உயர்ந்த மின்னணு மின்சார பொருட்கள் வாங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும்.

**மிதுனம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் ஆதாயமுண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அமோகமான நாள்.

**கடகம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற் கொள்வீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை அதிகரிக்கும். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள்.

**சிம்மம்**
தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். புதுவேலை கிடைக்கும். முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியம் இன்று முடியும்.

**கன்னி**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள்.

**துலாம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். தோற்றப் பொலிவு கூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். குடும்பத்தில் சின்ன சின்ன பிரச்னைகள் அதிகமாகும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம்.

**மகரம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். வீட்டை அழகுபடுத்துவீர்கள். இனிமையான நாள்.

**கும்பம்**
உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**மீனம்**
புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். மகிழ்ச்சியான நாள்.

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை 330 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது

## மானிப்பாய் பொலிஸார் அதிரடி நடவடிக்கை



யாழ்ப்பாணம்,ஜன.25

உடுவில் பிரதேசத்தில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் மானிப்பாய் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு பெருமளவிலான கோடா மற்றும் கசிப்பு - உற்பத்தி செய்யும் உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மானிப்பாய் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு மற்றும் பொலிஸ் சிறப்பு புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜி. ஜே. குணதிலக தலைமையிலான விசேட பிரிவினரால் இந்த கசிப்பு உற்பத்தி நிலையம் நேற்று முன்தினம் வியாழக் கிழமை முற்றுகையிடப்பட்டது.

உடுவில் பிரதேசத்தில் மல்வம் பகுதியில் குறித்த கசிப்பு உற்பத்தி நிலையம் இயங்கி வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் .

குறித்த முற்றுகையின் போது 330 லீற்றர் கோடா, 15 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப் படும் பதார்த்தங்கள், தயாரிக்க பயன்படுத்தும் சில உபகரணங்கள் உள்ளிட்டவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் 39 வயதுடைய அதே பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-05)

அரச சார்பற்ற நிறுவனங்களால்

# ரூ. 983 மில்லியன் பெறுமதியான திட்டங்கள் யாழில் 2024இல் நடைமுறைப்படுத்தப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன.25

கடந்த ஆண்டு அரச சார்பற்ற நிறுவனங்களால் 983 மில்லியன் ரூபாய் பெறுமதியான திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இடையிலான மாவட்ட ஒருங்கிணைப்பு கலந்துரையாடல் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "2024 ஆம் ஆண்டில் அரச சார்பற்ற நிறுவனங்களால் 983 மில்லியன் ரூபாய் பெறுமதியான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இதேவேளை, 2025ஆம் ஆண்டு இதுவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களால் நடைமுறைப்படுத்த 568 மில்லியன் ரூபா பெறுமதியான திட்டங்கள் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

குறை நிரப்பு வேலைகளில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டு வருவதாகவும், ஆனால் பிரதேச செயலகங்களுக்கு இடையில் ஒதுக்கீடுகளில் வேறுபாடுகள் காணப்படுவதனால் இந்தத் திட்டங்களை இரண்டு வாரங்களில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களையும் அழைத்து மீள ஆராய்ந்து இறுதித் தீர்மானம் எடுக்கலாம் எனவும் தெரிவித்தார்.

மேலும், அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைய குறிப்பாக "கிளீன் சிறிலங்கா" திட்டத்துக்கு அமையவும் அரச சார்பற்ற நிறுவனங்களின் திட்டங்களையும் உள்வாங்கி "செழுமையான நாடு அழகான வாழ்க்கை" என்ற கொள்கைக்கமைய அனைவரும் வினைத்திறனாக செயல்படுவோம் எனத் தெரிவித்தார். (எ-05)

# இலவச கல்வியை கேள்விக்குட்படுத்தும் வகையில் பாடசாலைகளுக்குள் ஆடம்பர கற்றல் உபகரணம்

யாழ்ப்பாணம்,ஜன.25

இலவசக் கல்வியை கேள்விக்குட்படுத்தும் வகையில் பாடசாலைக்குள், ஆடம்பர கற்றல் உபகரணங்கள் நுழைவதாக உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் ப. தர்மகுமாரன் தெரிவித்தார்.

நொதேன் விளையாட்டு கல்லூரியின் இயக்குநர் சசிகுமார் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாடசாலைகளில் இலவசக் கல்வி வழங்கப்படுகின்ற போதும் ஒரே சீருடை நடைமுறையில் இருக்கின்றபோதும் மாணவர்களின் சமத்துவத்தை சீரழிக்கும் வகையில் ஆடம்பர கற்றல் உபகரணங்கள் பாடசாலைக்குள் நுழைகின்றன.

இது பொருளாதாரத்தில் பின் தங்கி இருக்கும் மாணவர்களை பாதிப்பதுடன் பாடசாலைகளில் இருந்து இடைவிலகவும் காரணமாக அமைகின்றது என்றும் கூறினார். (எ-05)

# வத்திராயனில் வயர்மீது விழுந்து கிடக்கும் பனை

யாழ்ப்பாணம், ஜன.25

வடமராட்சி கிழக்கு வத்திராயனில் பனை மரம் ஒன்று ரெலிகொம் வயர் மீது முறிந்து விழுந்து காணப்படுகின்றது.

நீண்ட நாட்களாக வீதியின் அருகே ரெலிகொம் வயர் மீது விழுந்து காணப்படும் பனை மரத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இது தொடர்பில் அப்பகுதி கிராம உத்தியோகத்தர் ரெலிகொம் நிறுவனத்திற்கு தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (எ- 05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்களின் சலுகைகளை இரட்டிப்பாக அதிகரித்தது அரசு

## குற்றம்சாட்டுகிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, ஜன

**அரசியல்வாதிகளின் சிறப்புரிமைகள், சலுகைகளை குறைப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கு கடந்த அரசாங்கங்களை காட்டிலும் இரட்டிப்புச் சலுகைகளை வழங்க தீர்மானித்துள்ளது என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-அமைச்சர்களினதும், பாராளுமன்ற உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகளை குறைப்பதாகக் குறிப்பிட்டுக் கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் தற்போது அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களின் சலுகைகளை அதிகரித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தில் அமைச்சருக்கு 3 வாகனங்களும், அவரது சேவையாளர்களுக்கு 5 வாகனங்களும் என்ற அடிப்படையில் 8 வாகனங்களும், இராஜாங்க அமைச்சர்களுக்கு 3 வாகனங்களும், அவர்களின் சேவையாளர்களுக்கு 4 வாகனங்களும் என்ற அடிப்படையில் 7 வாகனங்களும் வழங்கப்பட்டன.

இந்த அரசாங்கம் அமைச்சரவை அமைச்சர்களுக்கு 10 வாகனங்களையும், பிரதி அமைச்சர்களுக்கு 8 வாகனங்களையும் வழங்கும் வகையில் சுற்றறிக்கையை தற்போது வெளியிட்டுள்ளது.

இதற்கமைய அமைச்சு மற்றும் பிரதி அமைச்சர்களின் பாவனைகளுக்கு 414 வாகனங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு வாகனம் வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்.

அமைச்சர் செல்லும்போது அவரது வாகனத்துக்கு முன்பாகவும், பின்னாலும் வாகனம் செல்ல வேண்டிய தேவை கிடையாது என்று குறிப்பிட்டார்.

தற்போது வானத்தில் பறப்பதற்கா இத்தனை வாகனங்கள் வழங்கப்படுகிறது என கேள்வியெழுப்பினார்.

மேலும், அமைச்சர் பிமல் ரத்நாயக்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொழும்பு நகரில் மிகவும் முக்கியமான கட்டடங்களை கைப்பற்றியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அந்த கட்டடங்கள் எவையென அவர் குறிப்பிட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வசிக்கும் வீட்டின் மாத வாடகை மதிப்பு 46 இலட்சம் ரூபா என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது. வாடகை கட்டணத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த வுக்கு அனுப்புங்கள். வாடகை கட்டணத்தைச் செலுத்துவதா அல்லது வீட்டில் இருந்து வெளியேறுவதா என்பதை அவர் தீர்மானிப்பார்-என்றார். (அ)

# ஈழத் தமிழ்க் கலைஞர் ஒன்றியத்தின் முதலாவது தேசிய மாநாடு

யாழ்ப்பாணம்,ஜன.25

ஈழத் தமிழ்க் கலைகளையும் கலைஞர்களையும் சுடர் விட்டுப் பிரகாசிக்கச் செய்யும் நோக்கில் உருவாக்கம் பெறும் ஈழத் தமிழ்க் கலைஞர் ஒன்றியத்தின் ஆரம்ப விழா நாளை நடைபெறவுள்ளது.

வவுனியாவில் உள்ள சுத்தானந்தா இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் பிற்பகல் ஒரு மணி அளவில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இணைந்து சிறப்புக்குமாறு அனைத்து ஈழத்துத் தமிழ்க் கலைஞர்களையும் விழா அமைப்பாளர்களாகிய நித்திலம் கலையகம் கேட்டுள்ளது.

# ஆசி கந்தராஜாவின் பவளவிழாவும் சிறப்பிதழ் வெளியீடும் இன்று

யாழ்ப்பாணம்,ஜன.25

'ஜீவநதி', 'எங்கட புத்தகங்கள்' ஏற்பாட்டில் ஆசி கந்தராஜாவின் பவளவிழாவும் சைவ முட்டை (அறிவில் புனைகதைகள்), ஜீவ நதியின் 'ஆசி கந்தராஜா சிறப்பிதழ்' வெளியீடும் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு யாழ் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்து.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வரவேற்புரையை 'எங்கட புத்தகங்கள்' கு.வசீகரனும் ஆசியுரையை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகனும் வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மற்றும் ஓய்வு நிலை அதிபர் சி.பவளகுமார் எழுத்தாளர் வே.தபேந்திரன் ஆகியோரும் வெளியீட்டுரை பேராசிரியர் கந்தையா ஸ்ரீகணசனும் நிகழ்த்துவர்.

கருத்துரைகளை எழுத்தாளர்களான இ.இராஜேஸ்கண்ணன், சி.ரமேஷ், சு.குணேஸ்வரன் ஆகியோரும் ஏற்புரையை ஆசி கந்தராஜாவும் நன்றியுரையை ஜீவநதி ஆசிரியர் க.பரணீதரனும் நிகழ்த்துவர்.

# இந்திய பிரஜையின் பொதி திருடிய சந்தேக நபர் கைது

கொழும்பு, ஜன. 25

ரயிலில் பயணித்த இந்திய பிரஜை ஒருவரின் பயணப் பொதியை திருடியதாக சந்தேக நபர் ஒருவர் ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த உடரட மெனிகே ரயிலில் பயணித்த இந்தியப் பிரஜை ஒருவரின் பயணப் பொதியை திருடிய சந்தேக நபர் ஒருவர் ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு ஹற்றன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

உடரட மெனிக்கே ரயிலின் மூன்றாவது பெட்டியில் பயணித்த இந்திய பிரஜையின் பயணப் பொதியை, இங்குருஓயா மற்றும் கலபட ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் குறித்த சந்தேக நபர்கள் வாடியுள்ளார்.

பின்னர் காணாமல்போன பயணப் பொதி குறித்து ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்ததையடுத்து, பாதுகாப்பு அதிகாரிகள் சந்தேக நபரை காணாமல்போன பயணப் பொதியுடன் கைது செய்து, அவரை ஹற்றன் ரயில் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, அங்கிருந்து ஹற்றன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

சம்பவம் குறித்து விசாரணை நடத்திய ஹற்றன் பொலிஸ் அதிகாரிகள், சந்தேக நபர் மாவனெல்ல பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் என்றும், அவர் கண்டியிலிருந்து ஹற்றனுக்கு ரயிலில் பயணிக்க ரயில் ரிக்கெற் பெற்றிருந்துள்ளதாகவும் தெரிவித்தனர். (அ)

# அரிசி தட்டுப்பாட்டுக்கான காரணம் கேட்டு ஆச்சரியமடைந்தோம் நாம்!

கொழும்பு, ஜன. 25

2024 ஆம் ஆண்டு ஒரு மெற்றிக்தொன் நெல் இல்லாமல் போர்யுள்ளது. அதனால் தான் தற்போது அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என விவசாயத்துறை அமைச்சு மற்றும் விவசாயத்துறை திணைக்களம் குறிப்பிட்டதை கேட்டு ஆச்சரியமடைந்தோம் என அரச நிதி தொடர்பான குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமர்வின் போது அரசாங்க நிதி தொடர்பான குழுவின் அறிக்கையை சபைக்கு சமர்ப்பித்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக அரிசி இறக்குமதிக்கு கடந்த மாதம் அனுமதி வழங்கப்பட்டு, இம்மாதம் 10 ஆம் திகதி வரை அரிசி இறக்குமதிக்கு காலவகாசம் வழங்கப்பட்டது.

நெல் மற்றும் அரிசி உற்பத்தி தொடர்பில் சரியான தரவுகளில் சிக்கல்கள் காணப்படுவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தனியார் ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க நிதி தொடர்பான குழுவுக்கு விவசாயத்துறை அமைச்சு மற்றும் விவசாயத் துறை திணைக்களத்தின் அதிகாரிகளை அண்மையில் அழைத்திருந்தோம். அவர்கள் குறிப்பிட்ட விடயங்களை கேட்டு ஆச்சரியடைந்தோம்.

2024 ஆம் ஆண்டு பெரும்போக விவசாயத்தில் 4.39 மில்லியன் மெற்றிக் தொன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டதாக விவசாயத்துறை அமைச்சின் அதிகாரிகள் குறிப்பிட்டார்கள். அக்காலப் பகுதியில் 2.9 மில்லியன் மெற்றிக்தொன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டதாக நாங்கள் குறிப்பிட்டோம்.

2000 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட நெல் மற்றும் அரிசியின் மொத்த தொகை தொடர்பில் தரவுகளை கோரியுள்ளேன்.

அதிகாரிகள் பொய்யான தரவுகளை குறிப்பிடுகிறார்களா அல்லது வர்த்தகர்கள் பொய் குறிப்பிடுகிறார்களா என்பதை அறிந்துக் கொள்ள முடியும்.

தரவுகள் பொய்யாயின் தீர்மானங்களும் தவறானதாக அமையும். ஆகவே இவ்விடயம் குறித்து ஆராயுமாறு விவசாயத்துறை அமைச்சுக்கு பரிந்துரைக்கிறோம்-என்றார். (அ)

# கராப்பிட்டிய வைத்தியசாலையில் 74 ஊழியர்களுக்கு டெங்கு தொற்று!

கொழும்பு, ஜன. 25

காலி, கராப்பிட்டிய தேசிய வைத்தியசாலையின் ஊழியர்களில் சுமார் 74 பேர் கடந்த மாதத்தில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக கராப்பிட்டிய தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.டி.யு.எம். ரங்கா தெரிவித்தார்.

வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் இளநிலை ஊழியர்கள் ஆகியோர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் வைத்தியசாலையில் இருந்தே சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் காலி மாநகர சபை, காலி வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் இணைந்து டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்களை வைத்தியசாலையில் அமுல்படுத்தியுள்ளன.

அதேவேளை, கடந்த காலங்களில் வைத்தியசாலை ஊழியர்களுக்கு டெங்கு காய்ச்சல் இல்லை எனவும், மழையுடன் டெங்கு பரவல் அதிகரித்துள்ளதாகவும், அதனை கட்டுப்படுத்த முடியவில்லை எனவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

கடந்த மூன்று வாரங்களில் காலி மாவட்டத்தில் டெங்கு என சந்தேகிக்கப்படும் 162 பேர் பதிவாகியுள்ளதாக காலி மாவட்ட பிராந்திய தொற்று நோய் நிபுணர் வைத்தியர் வெனுர கே. சிங்காரச்சி தெரிவித்தார். (அ)

# நாட்டில் 3 வாரங்களில் 3,649 டெங்கு நோயாளர்

கொழும்பு, ஜன. 25

இந்த வருடத்தின் முதல் 3 வாரங்களில் நாட்டில் 3,649 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தாண்டின் முதல் 3 வாரங்களில் 2 டெங்கு மரணங்களும் பதிவாகியுள்ளதாக மேற்படி பிரிவு தெரிவித்துள்ளது.

அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதோடு, அதன் எண்ணிக்கை 1,576 ஆகும்.

கொழும்பு மாவட்டத்தில் இருந்து 491 நோயாளர்களும், கம்பஹா மாவட்டத்தில் இருந்து 558 நோயாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் இருந்து 95 நோயாளர்களும் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் டெங்கு நோய் பரவக்கூடிய அதிக ஆபத்துள்ள சுகாதார வைத்திய அதிகார பிரிவுகள் 22 அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோதனைகளின்றி விடுவிக்கப்பட்ட கொள்கலன்களுக்கு அரசு பொறுப்பு

பிரதி அமைச்சர் ஜனித் ருவன் கொடிதுவக்கு

கொழும்பு, ஜன. 25

சுங்க தரப்பினரின் சோதனை இன்றி விடுவிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட 323 கொள்கலன்களில் போதைப்பொருள் அல்லது சட்டவிரோத பொருட்கள் அடங்கியிருந்தால் அதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்கும் என பிரதியமைச்சர் ஜனித் ருவன் கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் ஹோமாகமை பேருந்து சாலைக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டதன் பின்னர், ஊடகங்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாள் ஒன்றுக்கு 600 கொள்கலன்களை மாத்திரமே சோதனை செய்ய முடியும்.

எனினும், 2 ஆயிரத்திற்கும் அதிகமான கொள்கலன்களை நாள் ஒன்றில் துறைமுகத்திற்கு விடுவிக்க வேண்டிய தேவைப்பாடு இருக்கிறது.

கடும் சிரமத்திற்கு மத்தியிலேயே சுங்கத் தரப்பினரால் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக பிரதியமைச்சர் ஜனித் ருவன் கொடிதுவக்கு தெரிவித்தார். (அ)

## புகைப்பழக்கம் ஆண்களிடையே குறைந்து பெண்களிடம் உயர்வு!

வைத்திய நிபுணர் சான டி சில்வா எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 25

**ஆண்கள் புகைப்பிடிக்கும் வீதம் குறைவடைந்துள்ள நிலையில், பெண்களிடையே அதிகரித்து வருகிறது. இதனால் இளம் பெண்களுக்கு புற்றுநோய் ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளதாக சிறுவர் சுவாச நோய் வைத்திய நிபுணர் சான டி சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

எமது உடலில் சுவாச அமைப்பு மிகவும் முக்கியமானது. ஏனெனில், மனிதர்கள் உணவு அல்லது தண்ணீர் இல்லாமல் பல நாட்கள் வாழ முடியும். ஆனால், சுவாசிக்காமல் வாழ முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுவாச நோய்ப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சமன் மலி தல்பதடு தெரிவிக்கையில்-

உலகளவில் இறப்புக்கான ஏழாவது முக்கிய காரணியாக நாட்பட்ட நுரையீரல் அடைப்பு நோய் உள்ளது. இந்த நோய் நிலைமை தொடர்பில் சமூகத்தில் சரியான விழிப்புணர்வு இல்லை.

இந்த நோய் பல தசாப்தங்களாக கவனிக்கப்படாமல் சிகிச்சை அளிக்கப்படாத அஸ்மா அல்லது புகைபிடித்தல் காரணமாக ஏற்படுகிறது. மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகள் பொதுவாக 45 வயதுக்குப் பின்னர் ஏற்படும்.

நாட்டில் 40 வயதுக்கு மேற்பட்ட 10 வீதம் பேர் நாட்பட்ட நுரையீரல் அடைப்பு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக 2017ஆம் ஆண்டு ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது. இதற்கு குறைந்தளவிலான விழிப்புணர்வே காரணமாகும்.-என்றார். (அ)

## ரோஹிங்கியா ஏதிலிகளை அரசு நாடு கடத்த தீர்மானிக்கவில்லை

கொழும்பு, ஜன. 25

நாட்டில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்கியா ஏதிலிகளை நாடு கடத்துவதற்கான தீர்மானம் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படவில்லை என வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரா தெரிவித்துள்ளார்.

ரோஹிங்கியா ஏதிலிகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் முன்வைத்த சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், குறித்த ரோஹிங்கியா ஏதிலிகள் அனைவரும் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரா தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இனவாத ரீதியில் குழப்பம் விளைவிக்கும் நோக்கில் குறித்த பிரேரணையை முன்வைக்கவில்லை எனவும், பிரதி அமைச்சர் இந்த பிரேரணையை திசை திருப்ப முயற்சிப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பனர் ரவூப் ஹக்கீம் குற்றஞ்சாட்டினார்.

அத்துடன், தஞ்சமடைதல் சட்டவிரோதமான நடவடிக்கை அல்ல எனவும், அதனை ஏற்றுக் கொள்ளுமாறும் அவர் இதன் போது வலியுறுத்தினார்.

தாம் அரசாங்கத்தை குற்றம் சுமத்தவில்லை எனவும், வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளே தஞ்சமடைவோரை மீள அனுப்பிவைப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பனர் ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், நாட்டில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்கியா ஏதிலிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அத்துடன், குறித்த பிரஜைகளை மீள அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## புகையிலை நிறுவன இலாபம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 25

புகையிலை நிறுவனத்தின் இலாபம் சுமார் 400 வீதம் அதிகரித்துள்ளதாக அதன் நிர்வாகப் பணிப்பாளர் சம்பத் டி சேரம் தெரிவித்தார்.

முறையற்ற வரி நிர்ணயம் காரணமாக கடந்த 5 வருடங்களில் நாடு சுமார் 100 பில்லியன் ரூபா கலால் வருவாயை இழந்துள்ளதாக மது மற்றும் போதைப்பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

இந்த வரித் தொகையை நிர்ணயிப்பதன் மூலம் சிகரெட் விற்பனை சுமார் 50 வீதம் குறைந்திருந்தாலும் கூட புகையிலை நிறுவனத்தின் இலாபம் அதிகரித்துள்ளது என அவர் கூறினார். (அ)

## புதையல் தோண்டிய 7 பேர் கைது !

கொழும்பு, ஜன. 25

மாத்தளை, மஹவெல, அம்பொக்க பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றிற்கு அருகில் உள்ள காணி ஒன்றில் புதையல் தோண்டியதாகக் கூறப்படும் ஏழு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மஹவெல பொலிஸார் தெரிவித்தனர்.

மஹவெல பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தம்புள்ளை, மில்லவான, ஹிரியால, அக்குரம்பொட, இப்பாகமுவ, குருதெனிய மற்றும் கடுகண்ணாவை ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 27 முதல் 51 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர். (அ)

## 4ஆயிரம் மதுபான போத்தல்களை கைப்பற்றிய விசேட அதிரடிப்படை!

கொழும்பு, ஜன. 25

கிரிபத்கொட பகுதியில் சுமார் நான்காயிரம் மதுபானப் போத்தல்களை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள மதுபான உற்பத்தி நிலையத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின் போது இந்த மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக அரசாங்கத்திற்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## புலமைப் பரிசில் மேன்முறையீடுகள் இணையவழி ஊடாக சமர்ப்பிக்கலாம்

கொழும்பு, ஜன. 25

2024 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான மேன்முறையீடுகளை இணையவழி ஊடாக சமர்ப்பிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் கோரியுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 27 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி வரை இதற்கான காலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று முன் தினம் வெளியாகின.

அதற்கமைய, குறித்த பெறுபேறுகளை பரீட்சை இணையத்தளத்துக்கு பிரவேசித்து பார்வையிட முடியும். (அ)

## புதிய விண்ணப்பதாரர்களுக்காக 125000 கடவுச்சீட்டுகள் கொள்வனவு

கொழும்பு, ஜன. 25

புதிதாக கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளவர்களுக்காக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் கடவுச்சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அதனைப் பெற்றுக் கொள்வதற்காக இணையவழி மூலமாக திகதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நிலையியற் கட்டளை 27 இன் கீழ் 2 ல் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-புதிதாக கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளவர்களுக்காக ஒரு இலட்சத்து 25 ஆயிரம் கடவுச்சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அதனைப் பெற்றுக் கொள்வதற்காக இணையவழி மூலமாக திகதியைப் பெற்றுக் கொள்ள முடியும். அந்த வகையில் மேற்படி கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொள்வதற்கு ஐந்து மாத காலம் எடுக்கும்.

எனினும் எவருக்காவது கடவுச்சீட்டுக்கான அவசர தேவை காணப்படுமாயின் அதற்காக விசேட கரும பீடமொன்று ஒதுக்கப்பட்டுள்ளது. அதனை ஒரு நாளில் பெற்றுக் கொள்ள முடியும்.

இணையவழி மூலமாக தினத்தை ஒதுக்கிக் கொண்டுள்ளவர்களுக்காக ஒரு நாளில் 800 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்படுவதுடன் அவசர தேவைகளுக்காக கடவுச்சீட்டை எதிர்பார்ப்பவர்களுக்காக ஒரு நாளில் 650 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை, வெளிநாட்டுத் தூதுக்குழுவினருக்காக தினம் மும் 500 கடவுச்சீட்டுக்கள் விநி யோகிக்கப்படுகின்றன. -என்றார். (அ)

## பல பகுதிகளில் மோ.சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட இருவர் கைது

கொழும்பு, ஜன. 25

பல்வேறு பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களை திருடியதாக கூறப்படும் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் இருவரும் மாதம்பே பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் புத்தளம், மாதம்பே பகுதியில் வசிக்கும் 27 மற்றும் 31 வயதுடையவர்கள் ஆவர்.

சந்தேக நபர்கள் இருவரும் ஹெட்டிபொல மற்றும் குளியாப்பிட்டி ஆகிய பிரதேசங்களில் மோட்டார் சைக்கிள்களை திருடியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

திருடப்பட்டதாக கூறப்படும் மூன்று மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் பிறப்பு விகிதம் குறைவதால் தொழிலாளர் துறைகளில் தாக்கம்!

## பேராசிரியர் வசந்த அத்துக்கோரள கருத்து

கொழும்பு, ஜன. 25

**நாட்டில் பிறப்பு விகிதம் குறைந்து வருவது எதிர்கால தொழிலாளர் துறைகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறையின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்தார்.**

2023 ஆம் ஆண்டுக்குள் நாட்டில் பிறப்புகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 47 ஆயிரத்து 900 ஆகக் குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் பாடசாலைகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையும் குறைவடையும்.

அத்துடன் தொழில்துறைகள் கடுமையான நெருக்கடிகளை எதிர்நோக்கும் அபாயம் உள்ளது.

இதற்கிடையில், நாட்டில் முதியோர் மக்கள் தொகை படிப்படியாக அதிகரித்து வருகிறது. இதனால் சுகாதார சேவைகளில் நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் சுகாதார செலவு கடுமையாக அதிகரிக்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. நாட்டில் இறப்பு விகிதமும் அதிகரித்துள்ளதாக பேராசிரியர் வசந்த அத்துக்கோரள மேலும் கூறினார். (அ)

# அதிக விலைக்கு அரிசி விற்கும் வர்த்தகர்களை தேடி வேட்டை!

கொழும்பு, ஜன. 25

அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்களை தேடி நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் கொழும்பு மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இதன்போது, அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்த 20 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தை, தெஹிவளை, நுகேகொடை மற்றும் பொரளை ஆகிய பகுதிகளில் இந்த விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த பகுதிகளில் நேற்று முன்தினம் நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 6 குழுக்கள் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டன.

அத்துடன், நேற்று முன்தினம் புறக்கோட்டை மொத்த வர்த்தகர்கள் மற்றும் இறக்குமதியாளர்களை இலக்கு வைத்தும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. (அ)

# தென்னை மரங்களை வெட்ட அனுமதி தேவை!

கொழும்பு, ஜன. 25

நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான தேங்காய் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு தென்னை மரங்களை வெட்டுவதற்கு முன்னர் பிரதேச செயலாளரிடமும் மற்றும் தங்களிடமும் அனுமதி பெறவேண்டும் என தெங்கு அபிவிருத்தி சபை புதிய கொள்கையை அறிவித்துள்ளது.

இந்த தீர்மானம் ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் எடுக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் சபையின் ஆலோசகர் சமன் ஹேவகே தெரிவித்தார்.

அத்துடன், தென்னை பயிரிடப்பட்ட நிலங்களை ஒரு ஏக்கருக்கு மேல் ஏலம் விடுவது அல்லது பிரிப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு, விவசாய நிலப் பயன்பாட்டுக்கான கட்டுப்பாடுகளையும் அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலும், ஒரு ஏக்கருக்கு மேல் தென்னை பயிரிடப்பட்ட நிலங்கள் வேறு திட்டங்களுக்காக மீளப் பயன்படுத்தப்பட வேண்டுமானால், தென்னை அபிவிருத்திச் சபை, பிரதேச செயலகம் அல்லது தொடர்புடைய அரசாங்க அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட முழுமையான ஆய்வுக்குப் பின்னர் அனுமதி தேவைப்படும். (அ)

# பரீட்சை ஆணையாளர் பதவிக்கு உரிய அதிகாரியை நியமிக்குக!

## கல்வி நிர்வாக சேவை நிபுணர்கள் சங்கம் பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 25

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பதவிக்கு உரிய அதிகாரியொருவரை சட்டரீதியாக நியமிக்குமாறு, இலங்கை கல்வி நிர்வாக சேவை நிபுணர்கள் சங்கம் பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் கோரியுள்ளது.

ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பதவிக்கு 6 மாத சேவை நீடிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், குறித்த காலம், அடுத்த மாதம் நிறைவடையவுள்ளதாகவும் சங்கம் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

தற்போது, பதவியில் உள்ள பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு சேவை நீட்டிப்பு வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அவ்வாறான நடவடிக்கைகளுக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவை நிபுணர்கள் சங்கம் எதிர்ப்பினை வெளியிடும் என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், குறித்த பதவிக்கு அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் உள்ளதாகவும், அந்தப் பதவிக்கு நிரந்தர அடிப்படையில் உரிய அதிகாரியை நியமிக்க வேண்டும் என இலங்கை கல்வி நிர்வாக சேவை நிபுணர்கள் சங்கம் பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# 340,000 வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை 2025ஆம் ஆண்டில் பெறுவதே அரசின் இலக்கு

கொழும்பு, ஜன. 25

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இந்த வருடத்திற்குள் மொத்தமாக 340,000 இலங்கை பிரஜைகளுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை வழங்குவதற்கான தனது இலக்கை அறிவித்துள்ளது.

நேற்று முன் தினம் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் புதிதாக அனுமதிப் பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே தலைவர் கோசல விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-2024 ஆம் ஆண்டில், மொத்தம் 311,000 தனிநபர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது.

மேலும் இந்த ஆண்டு இந்த எண்ணிக்கையை 12 வீதம் அதிகரிக்க பணியகம் திட்டமிட்டுள்ளது. வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கான முறையான ஒழுங்குபடுத்தப்பட்ட செயல்முறையை உறுதி செய்வது முக்கியம்.

சில உரிமம் பெற்ற முகவர் நிலையங்கள் மோசடியான செயல்களில் ஈடுபடுவது தொடர்பான அறிக்கைகள் வெளிவந்துள்ளன. குற்றவாளிகள் மீது அவர்களின் தகுதி பாராது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

# பொலிஸ் உத்தரவை மீறி பயணித்த கார் மீது சூடு!

கொழும்பு, ஜன. 25

பொலிஸாரின் உத்தரவை மீறி பயணித்த கார் மீது நேற்று முன் தினம் இரவு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவின் கொழும்பு வடக்கு மோட்டார் சைக்கிள் குழுவினர் குறித்த காரை துரத்திச் இந்த துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டனர்.

இந்த சம்பவத்தில் ஒருவர் சிறு காயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த காரை கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவில் சோதனைக்காக நிறுத்துமாறு உத்தரவிடப்பட்ட போதிலும், அந்த உத்தரவை மீறி கார் வேகமாக பயணித்தமையினால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காரை சோதனையிட்டபோது, அதில் சட்டவிரோத மதுபான போத்தல்கள் இருந்ததாகவும் கூறப்பட்டது. (அ)

# பொலனறுவை வெள்ள சேதத்தை தடுப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்!

கொழும்பு, ஜன. 25

பொலனறுவை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதங்களைத் தணிக்க வேண்டிய அவசரத் தேவையை வலியுறுத்தி, மொரகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்கங்களிலிருந்து உபரி நீரை அனுராதபுரம் மற்றும் வடமேல் மாகாணத்துக்கு திருப்பி விடுவதற்கான கால்வாய்களை அமைக்கும் பணிகளை துரிதப்படுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பொலனறுவை மாவட்டம் அண்மையில் பெய்த கடும் மழையினால் பயிர்கள் நாசமடைந்துள்ளதுடன், உடைமைகளை சேதப்படுத்தியுள்ளதுடன், குடியிருப்பாளர்களுக்கு கணிசமான சிரமங்களை ஏற்படுத்தியுள்ளது.

நீர்த்தேக்கங்களிலிருந்து வரும் நீரை நிர்வகிப்பதற்கான முறையான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாததே இந்த அழிவுக்குக் காரணம் என்று முன்னாள் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

2019 ஆம் ஆண்டில், மொரகஹகந்தவிலிருந்து அனுராதபுரம் மற்றும் வடமேற்கு பகுதிகளுக்கு நீரைக் கொண்டு செல்வதற்காக சுமார் 15 முதல் 20 கிலோ மீற்றர் வரையிலான கால்வாய்கள் அமைக்கப்பட்டன.

எவ்வாறெனினும், 2019 முதல் 2024 வரை, இந்த முக்கியமான கால்வாய்களின் கட்டுமானம் அடுத்தடுத்த அரசாங்கங்களின் கீழ் முற்றிலுமாக நிறுத்தப்பட்டது.

எதிர்கால வெள்ளப் பாதிப்புகளைத் தடுப்பதற்கும் வடமேல் மாகாணம் மற்றும் அனுராதபுரம் மாவட்டத்தில் விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கும் அவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, மீதமுள்ள கால்வாய்களை நிர்மாணிப்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு தற்போதைய அரசை மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார். (அ)

# 7 இலட்சம் மாணவர்களுக்கு காலணி வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஜன. 25

250 இற்கும் குறைவான மாணவர்கள் கற்கும் பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு இலவசமாக பாடசாலை காலணிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-250 மாணவர்களுக்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு, பாடசாலை காலணியை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தவகையில், 7 இலட்சம் மாணவர்களுக்கு இவ்வாண்டு காலணி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறையில் மீண்டும் அரிசி விலை அதிகரிப்பு

## செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் வர்த்தகர்கள்

கல்முனை, ஜன.25

**அம்பாறையில் அரிசி வகைகளுக்கான செயற்கை தட்டுப்பாட்டை வர்த்தகர்கள் சிலர் ஏற்படுத்துவதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அத்தோடு, அரிசி விலையும் அதிகரித்துள்ளதாக மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**



அம்பாறை மாவட்டம் கல்முனை, அம்பாறை, அக்கரைப்பற்று மாநகர சபைகள் உள்ளிட்ட சம்மாந்துறை, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, திருக்கோவில், பொத்துவில், இறக்காமம், நாவிதன்வெளி, உகண, மகாஓயா, பதியத்தலாவ, தெகியத்தகண்டிய, தமண, நாமல்ஓயா, ஆலையடிவேம்பு, லகுகல பகுதிகளில் அரிசி வகைகளுக்கான தட்டுப்பாடுகள் நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில வர்த்தகர்கள் அரிசி வகைகளை பதுக்கல் செய்வதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டியுள்ளனர். எனவே, இவ்விடயம் தொடர்பில் அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் சில அரிசி ஆலைகள், வர்த்தக நிலையங்கள், அரிசி விடயத்தில் மாபியா இரகசியங்களை பேணி வருவதாக பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

இது தவிர அரிசி விற்பனை செய்யும் போது நுகர்வோருக்கு நிபந்தனை விதிப்பது, மேலதிக கட்டணங்களை அறவிடுவது, அரிசி வகைகளை பதுக்கி வைப்பது தொடர்பில் பொது மக்களால் பல்வேறு முறைப்பாடுகள் உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இவ்வாறு அரிசிக்கு தட்டுப்பாடுகள் நிலவிய போது, அம்பாறை மாவட்டத்தில் உள்ள நெல் களஞ்சியசாலை, வர்த்தக நிலையங்கள் மற்றும் அரிசி களஞ்சியசாலைகளில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அரிசி தட்டுப்பாட்டுக்கு மத்தியில் சில வர்த்தகர்கள் கையிருப்பில் உள்ள அரிசி வகைகளுக்கு நிர்ணய விலையை விடவும் அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதாக மற்றுமொரு குற்றச்சாட்டும் நுகர்வோரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, அரிசி ஆலை உரிமை யாளர்கள், அரிசி விலையை அவ்வப்போது அதிகரிப்பதால் நிர்ணய விலையில் அரிசியை விற்க முடியாமல் தவிப்பதாக அரிசி மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் தெரிவித்தனர். (எ)

# அரிசி பதுக்கல் தொடர்பில் அதிகாரிகள் சுற்றிவளைப்பு

பெரிய நீலாவணை, ஜன.25

அரிசி களஞ்சியசாலை மற்றும் அரிசி விற்பனை நிலையங்கள் மீது திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கை நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினரால் மேற்கொள்ளப்பட்டது.

நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை தலைவரின் ஆலோசனையுடன் நிறைவேற்றுப் பணிப்பாளரின் வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி சாலிந்த பண்டார நவரத்ன மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகளால் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் இந்த திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, பெரிய நீலாவணை பொலிஸாரின் பிரசன்னத்துடன் புலன் விசாரணை அதிகாரிகளால் பாண்டிருப்பு, மருதமுனை, பெரிய நீலாவணை பகுதியில் உள்ள அரிசி களஞ்சியசாலை மற்றும் அரிசி வர்த்தக நிலையங்கள் பரிசோதனை செய்யப்பட்டு எச்சரிக்கையுடன் அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் பல அரிசி களஞ்சியசாலைகள் மற்றும் அரிசி வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அரிசி பதுக்கலில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தொடர்பில் அறியத்தருமாறு பொதுமக்களிடம் அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் 20 இற்கும் மேற்பட்ட அரிசி விற்பனை நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன் விலைப் பட்டியல் காட்சிப்படுத்தத் தவறிய வர்த்தகர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.(எ)

# மட்டு. ஒல்லாந்தர் கோட்டையில் ஜப்பான் தூதுவர் உள்ளிட்ட குழு

மட்டக்களப்பு,ஜன.25

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அக்கியோ இசோமட்டா உள்ளிட்ட தூதரக அதிகாரிகள் குழுவினர் மட்டக்களப்பிலுள்ள பல சுற்றுலாத்தலங்கள், சமய தலங்களையும் பார்வையிட்டுள்ளனர்.

குறிப்பாக, மட்டக்களப்பில் உள்ள மிகவும் பழமை வாய்ந்த சுற்றுலாத்தலமாக திகழும் ஒல்லாந்தர் கோட்டையை பார்வையிட்டதுடன், மட்டக்களப்பின் சிறப்பம்சங்கள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான தமது பயணம் தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் ஜப்பான் தூதுவர் இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை, ஜப்பான் தூதுவர் உள்ளிட்ட ஜப்பான் குழுவினர் நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்டத்தின் பல இடங்களுக்கும் சென்றிருந்தனர். (எ)

# படைப்புழு தாக்கத்தால் சோளச்செய்கை பாதிப்பு

திருகோணமலை, ஜன.25

தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாக சோளச் செய்கையை படைப் புழுவின் தாக்கம் பாதித்துள்ளதாக செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

திருகோணமலை, கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உப்பாறு கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள சோலைவெட்டுவான், மயிலப்பஞ்சேனை முதலான பகுதிகளில் இந்த நிலைமை காணப்படுகின்றது.

இப்பகுதிகளில் சுமார் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் சோளச் செய்கை மேற்கொள்ளப்பட் டுள்ளன.

இப்படை புழுத் தாக்கத்தால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

அண்மையில் பெய்த மழை காரணமாக படைப்புழுக்கள் சோளச் செய்கையை பாதித்துள்ளது. படைப்புழு தாக்கத்துக்கு தகுந்த மருந்து (எண்ணெய்) அடித்தும் சரியாகவில்லை. சோளம் விளையாததற்கு இதுவும் காரணம் என செய்கையாளர்கள் கூறினர்.

எங்களுடைய வாழ்வாதார தொழில் இதுதான். படைப்புழுவால் பாதிக்கப்பட்டுள்ளோம். இந்தப் பகுதியில் படைப்புழு தாக்கியுள்ளதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

இதற்கான நடவடிக்கைகளை அர சாங்கம் விரைந்து எடுக்க வேண்டும் எனவும் சோளச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# 173 பேரும் 1075 ஏக்கர் விவசாயமும் வெருகலில் வெள்ளத்தால் பாதிப்பு

திருகோணமலை, ஜன.25

திருகோணமலை வெருகல் பகுதியில் தொடர்ச்சியாக வெள்ளம் அதிகரித்து வருவதால் 1075 ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 42 குடும்பங்களைச் சேர்ந்த 119 பேர் இடைத்தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மாவிலாறு திறந்து விடப் பட்டுள்ளமையால் வெருகல் பகுதியில் வெள்ளத்தின் மட்டம் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது.

இதனால், நேற்று முன்தினம் வியாழக் கிழமை மாலை பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் வெருகல் பகுதியில் 61 குடும்பங்களைச் சேர்ந்த 173 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 42 குடும்பங்களைச் சேர்ந்த 119 பேர் வெருகல் - மாவடிச்சேனை இந்து மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வட்டவான் பகுதியில் 535 ஏக்கரும், சேனையூர் பகுதியில் 80 ஏக்கரும், மாவடிச் சேனையில் 460 ஏக்கர் விவசாய நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாய சம்மேளனத்தினர் தெரிவித்தனர்.

அத்துடன் திருகோணமலை - மட்டக்க ளப்பு பிரதான வீதியின் வெரு கல் - மாவடிச்சேனை பகுதியில் வீதியை ஊடறுத்து 1. 5 அடி உயரத்துக்கு வெள்ளம் பாய்ந்து வருவதால் அதனூடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக வெருகல், சேருவில, மொறாவெவ, தம்பலகாமம், மூதூர், கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுகளில் 323 குடும்பங்களைச் சேர்ந்த 882 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 42 குடும்பங்களைச் சேர்ந்த 119 பேர் இடைத்தங்கல் முகாம்களிலும், 54 குடும்பங்களைச் சேர்ந்த 161 பேர் உறவினர்கள் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (எ)

# கல்முனையில் இரத்ததானம்

கல்முனை,ஜன.25

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று சனிக்கிழமை இரத்ததான முகாம் நடைபெறுகிறது.

கல்முனை ஆதார மருத்துவமனையுடன் இணைந்து இன்று காலை 08.00 மணி முதல் மாலை 04. 30 மணிவரை பாடசாலை வளாகத்தில் நடைபெறும்

இந்த இரத்ததான முகாமில் கலந்து கொண்டு குருதிக் கொடை வழங்குமாறு கார்மேல் பற்றிமாவின் 125 ஆவது நிறைவு நிகழ்வு நிறைவேற்றுக்குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (எ)

# கைநாட்டான் குளக்கட்டினை பாதுகாக்கும் வேலை ஆரம்பம்

திருகோணமலை,ஜன.25

திருகோணமலை, குச்சவெளி - கைநாட்டான் குளத்தின் அணைக்கட்டு உடைப்பெடுக்கும் நிலையில் காணப்படுகிறது.

இதனால், விவசாய சம்மேளனங்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து பிரதேச சபையின் செயலாளரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய பிரதேச சபையின் ஊழியர்கள், இராணுவத்தினர், விவசாயிகள், பொதுமக்கள் இணைந்து குளக்கட்டுக்கு மண் அணைப்பு வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பில் ஆராய்வு

திருகோணமலை, ஜன.25

கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன தலைமையில் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் ஆளுநரின் செயலாளர் ஜே. எஸ். அருள்ராஜ், சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களின் தலை வர்கள் மற்றும் சுற்றுலா தொடர்பான அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கு அரச துறை மூலம் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உடனடியாக வழங்குவது என்றும், சுற்றுலா துறையில் ஈடுபட்டுள்ள தரப்பினரால் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து தெரிவிக்கப்பட்டு, அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகளை எடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியுரிமையை ரத்து செய்யும் உத்தரவுக்கு இடைக்கால தடை

## அமெரிக்க நீதிமன்றம் அதிரடி, ட்ரம்ப் மேல்முறையீடு

வாஷிங்டன், ஜன.25

**அமெரிக்கக் குடியுரிமை பெறாத பெற்றோருக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டு வந்த பிறப்பின் அடிப்படையிலான குடியுரிமையை இரத்து செய்யும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் உத்தரவுக்கு அமெரிக்க நீதிமன்றம் தடை விதித்துள்ளது.**

முன்னதாக, கடந்த 20 ஆம் திகதி ஜனாதிபதியாக பதவியேற்ற ட்ரம்ப், உடனடியாக பல்வேறு முக்கிய உத்தரவுகளைப் பிறப்பித்தார். அதில், பிறப்புரிமை அடிப்படையிலான அமெரிக்க குடியுரிமை இரத்து செய்யப்படுகிறது. அமெரிக்காவில் பிறக்கும் குழந்தையின் பெற்றோரில் யாரேனும் ஒருவர் நிரந்தர அமெரிக்க குடியுரிமை பெற்றிருந்தால் மட்டுமே அந்தக் குழந்தைக்கு அமெரிக்க குடியுரிமை வழங்கப்படும். இந்த உத்தரவு 30 நாட்களில் நடைமுறைக்கு வரும். அமெரிக்க குடிமக்கள் அல்லாதவர்களின் குழந்தைகள் அமெரிக்காவின் 'அதிகார வரம்புக்கு உட்பட்டவர்கள்' அல்ல என்பதால், குடியுரிமை சட்டத்தின் 14 ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்ட அரசியலமைப்பு உத்தரவாதம் அவர்களுக்கு பொருந்தாது என்று பிறப்பித்த உத்தரவு அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்த உத்தரவை எதிர்த்து அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் வழக்குகள் தொடரப்பட்டன. இந்த நிலையில் சியாட்டல் மாகாண நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது, நீதிபதி ஜோன் கோக்னார், "ட்ரம்ப்பின் உத்தரவு அரசியலமைப்புக்கு விரோதமானது" எனக் கூறி அந்த உத்தரவுக்கு தற்காலிக தடை விதித்தார்.

இதேவேளை, நீதிமன்ற உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார். ஓவல் அலுவலகத்தில் ட்ரம்ப்பிடம் தடை உத்தரவு குறித்து தெரிவிக்கப்பட்டபோது, 'நிச்சயம் மேல்முறையீடு செய்வோம்' என்று அவர் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மனித கைகளும் இதயமும் உலகிற்கு இன்னும் தேவை

## ஏ ஐ மீது இந்திய அமைச்சர் சாடல்

பெர்ன், ஜன.25

உலகிற்கு செயற்கை நுண்ணறிவு (ஏஐ) பல வேலைகளை செய்தாலும் மனித கைகளும், இதயமும் மூளையும் தேவை என்று இந்திய மத்திய அமைச்சர் ஜெயந்த் சௌத்ரி தெரிவித்தார்.

சுவிட்சர்லாந்து நாட்டின் தாவோஸ் நகரில் நடைபெற்ற உலக பொருளாதார மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், "செயற்கை நுண்ணறிவு ஏற்கனவே பல்வேறு வேலைகளை செய்து கொண்டிருக்கலாம். ஆனால், உலகிற்கு இன்னும் மனித கைகளும், இதயமும், மூளையும் தேவைப்படுகிறது. செயற்கை நுண்ணறிவு உருவமற்றது. இந்தியாவில் அதன் பெயர் உண்மையானது அல்ல என்று பொருள் தரும் வகையில் "நக்லி" என்று அழைக்கப்படுகிறது.

எதிர்கால தேவைகளுக்கு ஏற்ப இளம் திறமையாளர்களை உருவாக்கும் முயற்சிகளை இந்தியா ஏற்கனவே செயல்படுத்தி வருகிறது.

எதிர்காலத்தில் தேவைப்படும் திறன்களை இளைய தலைமுறையினருக்கு பாடசாலை அளவிலேயே வழங்குவது நமது கடமையாகும்.

இந்தியாவில் இருந்து ஒரு பயிற்சி பெற்ற தொழிலாளர் ஐரோப்பாவுக்கு வரும்போது, அவருக்கு எதுவும் தெரியவில்லை என்று கூறக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுவதை நான் விரும்பவில்லை.

ஒவ்வொரு நாளும் நமது திறன்களை மறு ஆய்வு செய்யக்கூடிய நாளாகவே நான் பார்க்கிறேன்"- என்றார். (எ)

# எவரெஸ்ட் சிகரத்தில் ஏற கட்டணம் 36 வீதம் உயர்வு

## நேபாளம் அரசு அறிவிப்பு

காத்மண்டு,ஜன.25

எவரெஸ்ட் சிகரம் மீது ஏறுவதற்கான கட்டணத்தை நேபாள அரசு 36 சதவீதம் வரை உயர்த்தியுள்ளது.

நேபாளத்தின் இமய மலைப் பகுதியில் சாகர்மாதா தேசிய பூங்காவில் உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரம் அமைந்துள்ளது. ஆண்டுதோறும் ஏப்ரல், மே மாதங்களில் உலகம் முழுவதும் உள்ள ஏராளமான மலையேற்ற வீரர்கள் நேபாளம் வழியாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுகின்றனர். இந்த சீசனில் ஒருவருக்கு இலங்கை பெறுமதியில் சுமார் 33 இலட்சம் ரூபாய் கட்டணம் அறவிடப்பட்டது. தற்போது ஒருவருக்கு சுமார் 44 இலட்சம் ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஏஐ கட்டுப்பாடற்ற வளர்ச்சி உலகளாவிய அச்சுறுத்தல்

## சீர்திருத்தங்களுக்கு ஐ. நா. அழைப்பு

டாவோஸ், ஜன.25

செயற்கை நுண்ணறிவின் கட்டுப்பாடற்ற வளர்ச்சி மற்றும் காலநிலை நெருக்கடி ஆகியவற்றை உலகளாவிய அச்சுறுத்தல்கள் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் குறிப்பிட்டார்.

உலகப் பொருளாதார மன்றத்தின் ஆண்டு கூட்டம் சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் பல்வேறு நாடுகளின் அரசாங்க தலைவர்கள், சர்வதேச நிறுவனங்களின் தலைவர்கள், வர்த்தக தலைவர்கள் மற்றும் பொருளாதார மன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றி வருகின்றனர்.




இந்தக் கூட்டத்தின் 4ஆம் நாளான நேற்று உரையாற்றிய தலைவர்கள், வளர்ந்து வரும் தொழில்நுட்பமான செயற்கை நுண்ணறிவில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து தங்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் கூறுகையில், அதிகரித்து வரும் இரண்டு உலகளாவிய அச்சுறுத்தல்கள் குறித்து எச்சரித்துள்ளார். அவை, செயற்கை நுண்ணறிவின் கட்டுப்பாடற்ற வளர்ச்சி மற்றும் காலநிலை நெருக்கடி.இந்த சவால்கள், மனித குலத்துக்கு இதுவரையில்லாத அபாயங்களை ஏற்படுத்துவதாகவும், அரசாங்கங்கள் மற்றும் தனியார் துறைகள் உடனடியாக ஒருங்கிணைந்த நடவடிக் கையை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று குட்டெரெஸ் வலியுறுத்தினார்.

டிஜிற்றல் தொழில்நுட்பத்தை பொறுப்புடன் பயன்படுத்துவதற்கான ஒரு வரைபடமாக ஐக்கிய நாடுகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட உலகளாவிய டிஜிற்றல் ஒப்பந்தத்தை சுட்டிக்காட்டி பேசிய குட்டெரெஸ், இந்த விடயத்தில் உலக நாடுகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (எ)

# 1700 ஊழியர்கள் பணிநீக்கம் அமேசான் நிறுவனம் முடிவு

ஒட்டாவா, ஜன.25

1, 700 ஊழியர்களை பணி நீக்கம் செய்ய அமேசான் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இணைய வர்த்தகத்தில் முன்னணி நிறுவனமான அமேசானுக்கு உலகம் முழுவதும் பல கிளை அலுவலகங்கள் உள்ளன. கனடாவின் கியூபெக் மாகாணத்தில் உள்ள பல கிளைகள் நட்டத்தில் இயங்கி வருகின்றன. எனவே, அங்குள்ள 7 அலுவலங்களை மூடுவதாக அமேசான் நிறுவனம் அறிவித்துள்ளது. இதன்மூலம், அங்கு வேலை பார்த்து வரும் 1,700 பேர் பணி நீக்கம் செய்யப் படவுள்ளனர். நிறுவனத்தின் இந்த அறிவிப்பு ஊழியர்களி டையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.(எ)

# பாகிஸ்தானுடன் மீண்டும் வர்த்தகம் எந்த பேச்சுகளும் நடத்தப்படவில்லை

வாஷிங்டன், ஜன.25

பாகிஸ்தானுடன் மீண்டும் வர்த்தகத்தை தொடங்குவது குறித்து எந்தவொரு பேச்சுவார்த்தையும் நடத்தப்படவில்லை என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியா - பாகிஸ்தானுடனான வர்த்தகத்தை ஒரு போதும் நிறுத்தவில்லை, மேலும் இது தொடர்பான முடிவு 2019 இல் பாகிஸ்தான் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இருந்தே, இந்தியா மிகவும் விருப்பமான நாடு என்ற அந்தஸ்தைப் பெற வேண்டும் என்பதே எங்கள் ஆர்வமாக இருந்தது. பாகிஸ்தானுக்கு நாங்கள் அந்த அந்தஸ்தை வழங்கி வந்தோம். ஆனால் அவர்கள் எங்களுக்கு அதே அந்தஸ்தை வழங்கவில்லை என்றும் அவர் கூறினார்.வாஷிங்டனில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)



தாய்லாந்தில் தன் பாலினத் திருமணச் சட்டம் அமுலுக்கு வந்துள்ள நிலையில் நேற்று முன் தினம் அங்கு ஒரே நாளில் 300 இற்கும் மேற்பட்ட ஜோடிகள் திருமணம் செய்து கொண் டனர்.

ட்ரம்ப் அறிவிப்பு எதிரொலி

# மெக்சிக்கோவில் பிரம்மாண்ட கூடாரங்கள் அமைப்பு தீவிரம்

மெக்சிக்கோ சிற்றி, ஜன.25

ட்ரம்ப் அறிவிப்பு எதிரொலியாக நாடு திரும்புவோரை தங்க வைக்க மெக்சிக்கோவில் எல்லை அருகே உள்ள பகுதிகளில் பிரம்மாண்ட கூடாரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் கடந்த 20ஆம் திகதி பதவியேற்றார். ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் பல்வேறு அதிரடி அறிவிப்புகளை ட்ரம்ப் வெளியிட்டார்.அதில் குறிப்பாக அமெரிக் காவில் அகதிகள் குடியேற் றத்தை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கான நிர்வாக உத்தர வில் ட்ரம்ப் கையெழுத்திட் டார். இதன்படி அமெரிக்கா வுக்கான அகதிகள் வருகை மறு உத்தரவு வரும் வரை இடைநி றுத்தப்படுவதாக ட்ரம்ப் நிர்வாகம் அறிவித்தது.

மேலும் அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை நாடு கடத்தப்போவதாகவும் ட்ரம்ப் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், அமெரிக்காவில் இருந்து மெக்சிக்கோவுக்கு திருப்பி அனுப்பப்படுவோரை தங்கவைக்க மெக்சிக்கோ-அமெரிக்கா எல்லை அருகே அமைந்துள்ள டிஜூவானா, ரெய்னோசா, மடாமரோஸ் எல் புண்ட்டோ உள்ளிட்ட இடங்களில் பிரம்மாண்ட கூடாரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - இங்கிலாந்து 2ஆவது போட்டி இன்று



சென்னை, ஜன.25

இந்தியா - இங்கிலாந்து இடையிலான2ஆவது ரி - 20 போட்டி இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயனம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடி வருகிறது. இதில், முதல் ரி - 20 போட்டியில் இந்தியா வெற்றி பெற்று தொடரில் முன்னிலையில் உள்ளது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இன்று நடைபெறுகிறது.

போட்டியில் பங்கேற்பதற்காக இந்தியா மற்றும் இங்கிலாந்து வீரர்கள் விமானம் மூலமாக சென்னை வந்தடைந்தனர். (எ)

# 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய மகளிர் அணி வெற்றி

கோலாலம்பூர், ஜன.25

இலங்கையுடனான போட்டியில் 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய மகளிர் அணி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

நடப்பு ஐ. சி. சி. ஜூனியர் (19 வயதுக்குட்பட்ட) மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் மலேசியாவில் நடைபெற்று வருகிறது. இதில் குரூப் சுற்று போட்டியில் இலங்கையை வீழ்த்திய இந்தியா'சுப்பர் 6' சுற்றுக்கு முன்னேறியது.



நேற்று முன்தினம் வியாழக்கிழமை இலங்கை அணியுடன் நடைபெற்ற முதல் சுற்று போட்டியில் இந்தியா விளையாடியது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி பந்து வீச முடிவு செய்தது.

இதனையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 118 ஓட்டங்கள் எடுத்தது. கோங்கடி த்ரிஷா 44 பந்துகளில் 49 ஓட்டங்கள் எடுத்தார். 119 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இலங்கை விரட்டியது. இருப்பினும் குறைந்த ஓட்டங்களுக்குள் விக்கெட்களை இழந்து இலங்கை தடுமாறியது.

10 ஓவர்கள் முடிவில் 39 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை இழந்து தடுமாறிய இலங்கை, 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 58 ஓட்டங்களை மட்டும் எடுத்தது.

இதன் மூலம் இந்தியா 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்திய அணி சார்பில் பந்து வீசிய ஷப்னம், ஜோஷிதா, சிசோடியா ஆகியோர் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர். ஆயுஷி மற்றும் வைஷ்ணவி தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். (எ)

# சிறந்த ஆண்கள் அணியில் நான்கு இலங்கை வீரர்கள்

## தலைவராக அசலங்க, ஐ. சி. சி. அறிவிப்பு

டுபாய், ஜன.25

2024 ஆம் ஆண்டின் சிறந்த ஒருநாள் ஆண்கள் அணியை ஐ. சி. சி. அறிவித்துள்ளது. இதில் இலங்கை வீரர்கள் நால்வர் இடம்பிடித்துள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி.) ஒவ்வொரு வருடமும் சிறந்த வீரர், சிறந்த வீராங்கனை, சிறந்த ஒரு நாள் அணி, ரி - 20 அணி, டெஸ்ட் அணி உள்ளிட்ட பல்வேறு விருதுகளை வழங்கி வருகிறது.


இந்த நிலையில் 2024ஆம் ஆண்டின் சிறந்த ஒருநாள் ஆண்கள் அணியை ஐ. சி. சி. அறிவித்துள்ளது. ஆச்சரியமளிக்கும் வகையில் இதில் ஓர் இந்திய வீரர் கூட இடம்பெறவில்லை.

இந்த அணியில் அதிகபட்சமாக இலங்கை வீரர்கள் 4 பேரும், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் வீரர்கள் தலா 3 பேரும் இடம் பிடித்துள்ளனர். இந்த அணிக்கு சரித் அசலங்க தலைவராகவும், குசல் மெண்டிஸ் விக்கெட் காப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அந்த அணி விவரம் வருமாறு, சைம் அயூப் (பாகிஸ்தான்), ரஹ்மனுல்லா குர்பாஸ் (ஆப்கானிஸ்தான்) பதும் நிஸ்ஸங்க (இலங்கை), குசல் மெண்டிஸ் (இலங்கை), சரித் அசலங்க (தலைவர் - இலங்கை), ஷெர்பேன் ரூதர்போர்ட் (மேற்கு இந்திய தீவுகள்), அஸ்மத்துல்லா ஓமர்சாய் (ஆப்கானிஸ்தான்), வனிந்து ஹசரங்க (இலங்கை), ஷாகின் ஷா அப்ரிடி (பாகிஸ்தான்), ஹாரிஸ் ரவூப் (பாகிஸ்தான்), அல்லா கசன்பர் (ஆப்கானிஸ்தான்) ஆகியோர் இடம்பிடித்துள்ளனர். (எ)




# இறுதிப்போட்டியில் அரினா சபலெங்கா



மெல்பேர்ன், ஜன.25

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் அரினா சபலெங்கா இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடர் மெல்பேர்னில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான பெலாரஸ் நாட்டைச் சேர்ந்த அரினா சபலெங்கா - ஸ்பெயினின் பாலா படோசாவுடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய அரினா சபலெங்கா 6-4, 6-2 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். இதனால் அவர் இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். (எ)

# காயத்தால் விலகிய நோவக் ஜோகோவிச்

## இறுதிக்கு முன்னேறிய அலெக்ஸாண்டர்





மெல்பேர்ன், ஜன.25

நடப்பு அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் ஆடவர் ஒற்றையர் அரையிறுதி ஆட்டத்தின் போது காயம் காரணமாக நோவக் ஜோகோவிச் விலகினார். இதனால் ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரேவ் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்

இந்த ஆட்டம் தொடங்குவதற்கு முன்பாக செர்பியாவின் ஜோகோவிச், இடது காலில் பண்டேச் ஒட்டிக் கொண்டு களம் கண்டார். இந்தத் தொடரின் காலிறுதிப் போட்டியில் அல்கராஸூடன் விளையாடிய போது அவர் காயமடைந்தார்.

இந்த நிலையில் ஸ்வெரேவ் உடனான அரையிறுதி ஆட்டத்தில் முதல் செட்டை 6-7 என்ற கணக்கில் இழந்தார் ஜோகோவிச். தொடர்ந்து அவருடன் பரஸ்பரம் கை குலுக்கி விட்டு களத்திலிருந்து விடை பெற்றார். அப்போது அவரை பார்வையாளர்கள் இகழ்ந்தனர்.

"காயம் காரணமாக விலகும் வீரரை பார்வையாளர்கள் இகழ்வதை ஏற்க முடியாது. அப்படி யாரும் செய்யக்கூடாது. அனைவரும் டிக்கெட்டுக்கான கட்டணத்தை செலுத்தி உள்ளீர்கள். 5 செட் கொண்ட போட்டியை பார்க்க வேண்டும் என்ற நம்பிக்கையுடன் வந்து இருப்பீர்கள். அதே நேரத்தில் இதற்கு முன்பு காயம் கொடுத்த வலியை தாங்கிக் கொண்டு அவர் பட்டம் வென்றதை கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். அதனால் அவரது முடிவுக்கு கொஞ்சம் மதிப்பு கொடுங்கள்"என களத்தில் பேட்டியளித்த அலெக்ஸாண்டர் ஸ்வெரேவ் தெரிவித்தார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இறுதிப் போட்டியில் நடப்பு சம்பியனான ஜன்னிக் சின்னெர் மற்றும் பென் ஷெல்டன் ஆகியோர் இடையேயான இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெறும் வீரரை ஸ்வெரெவ் எதிர்கொள்ளவுள்ளார். (எ)

# இந்திய சுழற்பந்து வீச்சை அடித்து நொறுக்க வேண்டும்

சென்னை,ஜன.25

இந்திய சுழற்பந்து வீச்சை அடித்து நொறுக்க வேண்டும் என்று இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோஸ் பட்லர் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் ரி - 20 போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்திய அணி சார்பில் வருண் சக்கரவர்த்தி 3, அக்சர் பட்டேல் 2 விக்கெட்களை வீழ்த்தினர். மற்றொரு சுழற்பந்து வீச்சாளரான ரவி பிஷ்னோய் விக்கெட்களை வீழ்த்தாவிட்டாலும் ஓட்டக் குவிப்பை கட்டுப்படுத்தினார். இவர்கள் 3 பேரும் கூட்டாக 12 ஓவர்களை வீசி 67 ஓட்டங்களை மட்டுமே வழங்கினர்.

இந்தப் போட்டிக்கு பின்னர் ஜோஸ் பட்லர் கூறுகையில், இந்திய சுழற்பந்து வீச்சாளர்களுக்கு எதிராக நாங்கள் விளையாட விரும்பிய ஆட்டத்தை மேற் கொள்ள முடியாமல் போனது. அவர்கள், சிறப்பாக பந்துவீசினார்கள். எங்கள் அணியில் உள்ள சில வீரர்கள் முதன் முறையாக இந்திய அணியில் சில சுழற்பந்து வீச்சாளர்களை எதிர்கொண்டனர்.

சிறப்பாக விளையாட விரும்பினால், சுழற்பந்துவீச்சாளர்களை அழுத்தத்துக்கு உட்ப டுத்த வேண்டும்.இந்திய சுழற்பந்து வீச்சாளர்க ளுக்கு எதிராக அழுத் தத்தை திருப்ப வேண்டும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண...

சுவிற்சர்லாந்தின் அனுபவத்தையும் தொழில்நுட்ப அறிவையும் வழங்குவது குறித்தும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும் அரசாங்க முன்னுரிமைத் திட்டங்களுக்கு சுவிற்சர்லாந்து அரசாங்கத்தின் தொழில்நுட்ப மற்றும் ஏனைய தேவையான உதவிகள் மற்றும் கிளீன் சிறிலங்கா திட்டத்துக்கு வழங்கக்கூடிய ஒத்துழைப்பு குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வடக்கு அபிவிருத்தி, தேசிய ஒற்றுமை மற்றும் ஏனைய சமூகப் பிரச்னைகளுக்கான தீர்வுகளுக்கு இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பதற்கும் தேவையான உதவிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் சுவிற்சர்லாந்து தூதுவர் தெரிவித்தார்.

இதில் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரொஷான் கமகேவும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டார். (அ)

## விசுவமடு...

தோற்றிய 14 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேலாக புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை, விசுவமடு விஸ்வநாதர் ஆரம்பப் பாடசாலையின் தைப்பொங்கல் விழாவும் நேற்று சிறப்புற இடம் பெற்றது. (அ)

## வவுனியா...

வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணை இடம்பெற்று வரும் நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் நேற்று முன்தினம் இரவு 11:30 மணியளவில் இவரது வீட்டுக்கு அருகில் சென்று கொண்டிருந்தபோது கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் இவரது மைத்துனர் விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஈச்சங்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

## எதிரணி...

இலங்கை தமிழ் காங்கிரஸ், ரெலோ பாராளுமன்ற உறுப்பினர்களுடன், அகில இலங்கை மக்கள் காங்கிரசின் ரிஷாத் பதியுதீன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்ட மீனவர் சங்க பிரதிநிதிகள், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் மன்னார், முல்லைத்தீவு இணைப்பாளர்கள் என 14 மீனவர் பிரதிநிதிகள் சந்திப்பில் பங்கேற்றனர்.

இந்திய மீனவர்கள் அத்துமீற, சட்டவிரோத மீன்பிடி முறைகளை கையாள்வதால் தமது வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், கடற்றொழிலில் தொடர்ந்து ஈடுபட முடியாதுள்ளதாகவும், எதிர்க்கட்சியிலுள்ள பிரதிநிதிகளுடனேயே தம்மால் இது பற்றி பேச முடியுமென்றும் மீனவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்திய தரப்பு மற்றும் இந்த விடயத்தை பேசக்கூடிய தரப்புடன் பேசி தமக்கு தீர்வொன்றை பெற்றுத் தருமாறு அவர்கள் கோரினர்.

இது தொடர்பில் அரசு, இந்திய தரப்புடன் பேச்சு நடத்த வசதியாக மீனவர் சங்கங்கள் ஒரு குழுவை அமைக்குமாறும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து அந்த பேச்சுக்களை முன்னெடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

## சிறைக்குள்...

மூன்று மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். குறித்த குடும்பஸ்தரின் வழக்கு நேற்று வவுனியா நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்கு விசாரணைக்காக வருகை தந்த அவரது மனைவி நீதிமன்றத்தில் இருந்து குறித்த குடும்பஸ்தரை சிறைச்சாலை கொண்டு சென்றபோது அவருடன் உரையாடிப் பொதி ஒன்றை வழங்கியுள்ளார்.

இதில் சந்தேகமடைந்த சிறைக் காவலர்கள் உடனடியாக வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து, அப் பொதியில் இருந்து 2 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கண்டு பிடிக்கப்பட்டது. பொலிஸாரால் போதைப் பொருள் மீட்கப்பட்டதுடன், குறித்த பெண் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## பாதுகாப்பு...

பெயரிடப்பட்டுள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷ தனது வழக்கறிஞர்கள் மூலம் தாக்கல் செய்த மனுவில், முறையான பாதுகாப்பு மதிப்பீடு இல்லாமல், அவரது பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட பாதுகாப்புக் குழுவிலிருந்து 60 அதிகாரிகள் மட்டுமே தக்க வைக்கப்பட்டனர் என்றும், மற்ற அனைவரும் நீக்கப்பட்டனர் என்றும் கூறப்பட்டுள்ளது

மேலும், தற்போது தனது பாதுகாப்புக்காக ஆயுதம் ஏந்திய பாது காப்புப் படையினர் யாரும் பணியில் அமர்த்தப்படவில்லை என்றும், தனது பாதுகாப்பிற்காக பொலிஸ் அதிகாரிகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷ தனது மனுவில் தெரி வித்துள்ளார்

சுமார் மூன்று தசாப்தங்களாக நீடித்த போரை முடிவுக்குக் கொண்டுவர தலைமை தாங்கி தான் பயங்கரவாத அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் ஒருவர் எனவும், மேலும் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் அவரது மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பிரதிவாதிகள் தனது பாதுகாப்பை தன்னிச்சையாக நீக்கியதன் மூலம் தனது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பளிக்குமாறும் அவர் உயர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

மேலதிகமாக, தனக்கு எதிரான அச்சுறுத்தல்கள் குறித்து மதிப்பீடு செய்ய பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

எனவே, தனக்கு வழங்கப்பட்ட முழு பாதுகாப்புப் படையையும் திருப்பித் தருமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் மனுதாரரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார். (அ)

## அதானி...

செய்தியை அதானி குழுமம் மறுக்கிறது

மன்னார் மற்றும் பூநகரியில் அமையவுள்ள அதானியின் காற்றாலை மின் திட்டங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக வரும் செய்திகள் தவறானவை. இத் திட்டம் இரத்து செய்யப்படவில்லை என்பதை நாங்கள் திட்டவட்டமாகக் கூறுகிறோம்.

மே 2024இல் அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தை மறு பரிசீலனை செய்ய ஜனவரி 2, 2025 அன்று இலங்கை அமைச்சரவை எடுத்த முடிவு, குறிப்பாக ஒரு புதிய அரசாங்கத்துடன், அவற்றின் தற்போதைய முன்னுரிமைகள் மற்றும் எரிசக்தி கொள்கைகளுடன் விதிமுறைகள் ஒத்துப்போவதை உறுதி செய்வதற்கான மறுஆய்வு செயல்முறையின் ஒரு பகுதியாகும்.

இலங்கையின் பசுமை எரிசக்தி துறையில் 1 பில்லியன் டொலர்களை முதலீடு செய்வதற்கும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் அதானி தொடர்ந்து உறுதிபூண்டுள்ளது - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மரணச் சடங்கு இறுதி ஊர்வல நிகழ்வில் கலந்துகொண்டோரை மோதித் தள்ளிய கார்!

## சிறுவர்கள் உட்பட 7 பேர் படுகாயம்; சாரதி கைது!

யாழ்ப்பாணம், ஜன. 25

மரணச் சடங்கு இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் மீது, வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று பின் பக்கமாக வந்து மோதியதில் 11 காயமடைந்துள்ளனர்.

இவர்களில் சிறுவர்கள் உட்பட 7 பேர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று (24) பிற்பகல் 3 மணியளவில் யாழ். நல்லூர், கல்வியங்காடு, இராஜ வீதியில் இடம்பெற்றுள்ளது.

கார் சாரதி யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஐயப்ப விரத யாத்திரைக்கு இந்தியாவுக்குச் சென்றிருந்த நிலையில், அங்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்த பிரபல நாதஸ்வர வித்துவானும் ஐயப்ப பக்தனுமான வடிவேலு செல்வராசாவின் இறுதிக் கிரியைகள் நேற்று இடம்பெற்றன.

இவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் மீது, வேகக் கட்டுப்பாட்டை இழந்து பயணித்த கார் பின் பக்கமாக மோதியுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த 11 பேரில் 5 பேர் சிறு காயங்கள் அடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

ஏனைய 7 பேரும் படுகாயங்களுக்கு ஆளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சத்தியசீலன் சஞ்ஜீவ் (வயது - 19), சம்பத் ஜனார்த்தனன் (வயது - 14), தவராசா அனஞ்ஜயன் (வயது - 19), சிறிதரன் கபினாஸ் (வயது -20), உலகநாதன் ஜெயந்தன் (வயது - 23), தவராசா ஆகாசன் (வயது -13) ஆகியோரே படுகாய மடைந்தவர்களாவர்.

## மூன்றாவது...

பண்பாட்டு மையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு பெயர்ப் பலகை பொருத்தப்பட்டுள்ளது.

இந்திய அரசின் நன்கொடையாக நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தை 2023 ஆம் ஆண்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து திறந்து வைத்திருந்தனர்.

இந்நிலையில் கடந்த 18ஆம் திகதி இலங்கையின் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சுனில் செனவி, இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் அக்கட்டடத்திற்கு திருவள்ளுவர் கலாசார மையம் என பெயர் சூட்டி பெயர்ப் பலகையை திறந்து வைத்தனர்.

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம் என்ற பெயர் மாற்றப்பட்டு, திருவள்ளுவர் கலாசார மையம் என பெயர் சூட்டியமைக்கு யாழ்ப்பாணத் தில் உள்ள அரசியல்வாதிகள், கல்வி யாளர்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் தமது கண்டனத்தை தெரிவித்து வந்தனர்.

இந்நிலையில் நேற்று குறித்த கட்டடத்தில், யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம் என பெயர்ப் பலகை பொருத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான முக்கிய கட்டட மொன்றை கட்டி, அடிக்கடி பெயரை மாற்றி, பல தரப்பினரும் அரசியல் செய்யும் செயற்பாட்டுக்கு மக்கள் கடும் விசனம் வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 4அம்ச கோரிக்கைகளை...

போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் மாணவர்கள் தெரிவிக்கையில்-

கடந்த மே மாதம் விஞ்ஞான பீட மாணவர்களின் கற்றல் மண்டபத்தில் மாணவர்கள் கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது , மாணவர்களை மண்டபத்தினுள் வைத்து விரிவுரையாளர் ஒருவர் பூட்டியவேளை விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத் தலைவர் மண்டப கதவைத் திறந்து மாணவர்களை வெளியேற்றி இருந்தார். கதவு பூட்டை உடைத்தே திறந்ததாக குற்றம் சாட்டி அவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டது

அதுபோன்று பல்கலைக்கழகத்தினுள் இருந்த ஐந்து கல்லாசனங்களை உடைத்து எறிந்தமை தொடர்பில் கலைப் பீடாதிபதியிடம் கேள்வி எழுப்பிய மாணவர்கள் ஐவருக்கும் வகுப்பு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை புதுமுக மாணவர்கள் தமது வட்ஸ் அப் குழுவில் பல்கலைக் கழகத்தில் தாம் விரும்பும் பாடங்களை கற்க அனுமதிக்கவேண்டும் என கோரிக்கையை முன் வைக்க வேண்டும் என்றும், கோரிக்கையை ஏற்க தவறினால் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என அவர்களின் குழுவில் கலந்துரையாடியுள்ளனர்.

அவ்வாறு கலந்துரையாடிய மாணவர்கள் இருவருக்கும் வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. புதுமுக மாணவர்களுக்கான முதல் நாள் விரிவுரைகள் கடந்த திங்கட்கிழமையே ஆரம்பமாகின. மாணவர்கள் பல்கலைக்கழகத்தினுள் கற்றல் நடவடிக்கைக்கு வர முதலே அவர்களுக்கு வகுப்பு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக முதல் நாள் விரிவுரை என்பது மாணவர்களுக்கு முக்கியமான நாளாகும். அந்த நாளில் வகுப்பு தடை விதிக்கப்பட்டு பல்கலைக்கழகத்தினுள் மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

மாணவர்களின் நலன் சார்ந்து பேச வேண்டிய பல்கலைக்கழக மூதவையோ, பேரவையோ கடந்த 08 மாதங்களுக்கு மேலாக தொடரும் இந்த மாணவர்களின் பிரச்னை தொடர்பில் எந்த கரிசனையும் கொள்ளவில்லை என்பது மாணவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதுடன், மூதவை மற்றும் பேரவை ஆகியவை முடங்கியுள்ளமை வேதனையை ஏற்படுத்தி உள்ளது என போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், மாணவர்கள் மீதான பழிவாங்கல்களை உடன் நிறுத்த வலியுறுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்னிறுத்தி குறித்த உண்ணாவிரதப் போராட்டம் மாணவர்களினால் முன்னெடுக்கப்படுகின்றது.

அதன்படி

1. விதிகளுக்குப் புறம்பாக நடைபெறும், நடைபெற்ற மாணவர்கள் மீதான விசாரணைகளை உடன் நிறுத்து!

2. போராடுதல், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உள்ளிட்ட மாணவர்களின் அடிப்படை உரிமைகளை உறுதி செய்!

3. விரிவுரையாளர்கள் மீதான முறைகேடுகளையும் பாரபட்சமின்றி விசாரணை செய்!

4. மாணவர்களின் கற்றலிற்கான சுதந்திரத்தை உறுதி செய்து - மாணவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கு, உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்து தீர்வு கிடைக்கும் வரை உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

மன்னார் காற்றாலை மின் திட்டம்

# அதானி குழுமத்தினருக்கு வழங்கிய அனுமதி இரத்து

கொழும்பு, ஜன. 25

**மன்னார் பூநகரி காற்றாலை மின் திட்டத்தை முன்னெடுப்பதற்கு இந்தியாவின் அதானி குழுமத்துக்கு கடந்த வருடம் ஜூன் மாதம் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் வழங்கிய அனுமதியை அமைச்சரவை இரத்து செய்துள்ளது.**

**ஜனாதிபதி தலைமையில் கூடிய அமைச்சரவை இந்த திட்டத்துக்கான அனுமதியை இரத்து செய்வதற்கு தீர்மானித்துள்ளது.**

இந்த திட்டத்துக்கு இலங்கையில் எதிர்ப்புகள் உருவானதுடன் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் மற்றும் சுற்றுசூழல் அறக்கட்டளை நிறுவனம் உட்பட பல அமைப்புகள் இந்த திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுசூழல் மதிப்பீட்டில் குறைபாடுகள் உள்ளன என்பதாலும் மன்னார் வலசப்பறவைகளுக்கான பகுதி என்பதாலும் இந்த திட்டத்தை கடுமையாக எதிர்த்தன.

மன்னார் ஆயர் உட்பட மன்னார் மக்களும் தங்கள் வாழ்வாதாரம் மற்றும் தொழில்துறைக்கு பாதிப்பு ஏற்படும் என தெரிவித்து இந்த திட்டத்தை கடுமையாக எதிர்த்தனர்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது இந்த திட்டத்தை இரத்துச் செய்வேன் என உறுதியளித்திருந்த அனுரகுமார திஸாநாயக்க, இலங்கையில் காற்றாலை மின் திட்டத்தை முன்னெடுப்பதற்காக சர்வதேச கேள்விப்பத்திரத்தை கோருவேன் என தெரிவித்திருந்தார். (அ)

தேர்தல் கணக்கறிக்கை விவகாரம்

## அர்ச்சுனா உட்பட 09 பேரிடம் பொலிஸார் தீவிர விசாரணை!

கொழும்பு, ஜன. 25

தேர்தல் கணக்கறிக்கை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் உட்பட 09 பேர் மீதான விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது போட்டியிட்ட வேட்பாளர்கள் தமது செலவீன அறிக்கைகளை தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ளனர்.

இந்நிலையில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அதனடிப்படையில், பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் உட்பட யாழ். தேர்தல் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்ட சசிகலா ரவிராஜ், அ.உமாகரன், சி.மயூரன், த.கிருஸ்ணானந், ந. கௌசல்யா, குருசாமி சுரேன் உட்பட 09 பேர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதில் சசிகலா ரவிராஜிடம் பொலிஸார் வாக்கு மூலங்களை பெற்றுக்கொண்டுள்ளனர்.

ஏனையவர்களிடமும் வாக்குமூலங்களை பெற்ற பின்னர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு விசாரணை அறிக்கைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை யாழ். தேர்தல் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்டவர்களில் இதுவரை தமது தேர்தல் செலவீன அறிக்கைகளை தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்காத 35 பேருக்கு எதிராகவும் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## குறைவடைகிறது நெல்லின் விலை!

கொழும்பு, ஜன. 25

நெல் அறுவடை சந்தையை வந்தடைந்தாலும், நெல்லுக்கு உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படவில்லை என்றும், இதன் விளைவாக, ஒரு கிலோ நெல்லின் விலை 110 ரூபாய் முதல் 120 ரூபாய் வரை குறைவடைந்துள்ளதாக விவசாயிகள் போராட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

உத்தரவாத விலையை நிர்ணயிக்காததுடன், அரசாங்கம் இன்னும் நெல் கொள்முதல் செய்யும் செயல்முறையை தொடங்கவில்லை என்றும், எனவே நெல்லுக்கு உத்தரவாத விலையை அவசரமாக நிர்ணயிக்க வேண்டும் என்றும் அமைப்பின் தேசிய அமைப்பாளர் விமல் வத்துஹேவா தெரிவித்தார்.

திருகோணமலைப் பகுதியில் அறுவடை தற்போது சந்தைக்கு வந்து கொண்டிருப்பதாகவும், அதன்படி, சிவப்பு பச்சை நெல் ஒரு கிலோ 110 ரூபாய் முதல் 120 ரூபாய் வரையிலும், மற்ற வகை நெல் 110 ரூபாய் முதல் 115 ரூபாய் எனும் மிகவும் குறைந்த விலையிலும் வாங்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

அரிசியின் விலை தற்போது மக்களால் வாங்க முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளதாகவும், இதையும் மீறி விவசாயிகளின் அறுவடைகள் குறைந்த விலையில் வாங்கப்படுவதாகவும் அவர் கூறினார். (அ)

## 16.05 வீதமான தரம் 5 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றனர்!

கொழும்பு, ஜன. 25

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 16.05 வீதமான மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் சித்தி வீதம் அதிகரித்துள்ளது. கடந்த வருடம் 15.22 சதவீதமான மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்றிருந்தனர் என

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை இம்முறை அதிகரித்துள்ளது. கடந்த வருடம் 77.75 சதவீத மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றி ருந்த நிலையில் இம்முறை 77.96 வீதமான மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

37.70 வீதமான மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். கடந்த வருடம் 45.06 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

16.05 வீதமான மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர். கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் சித்தி வீதம் அதிகரித்துள்ளது. கடந்த வருடம் 15.22 சதவீதமான மாணவர்கள் வெட்டு புள்ளிக்கு மேல் பெற்றிருந்தனர்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் கடந்த காலங்களில் புள்ளிகளைக்கூட மாணவர்கள் பெற்றிருந்தனர். இம்முறை அதிகூடிய புள்ளியாக 188 பெறப்பட்டுள்ளது - என்றார். (அ)

## வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்தும் ஆக்கிரமிக்கப்படும் விவசாய நிலங்கள்

### அதிகாரிகள் மௌனம்

வவுனியா, ஜன. 25

வவுனியா மன்னார் பிரதான வீதியில் குருமன்காடு - பட்டானிச்சூர் இடைப்பட்ட வயல் நிலங்களில் தொடர்ந்தும் மண்கள் கொட்டப்பட்டு அவைகளை மேட்டு நிலங்களாக மாற்றி கட்டிடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் உரிய அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாது மௌனம் காப்பதாக விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பட்டானிச்சூர் புளியங்குளத்தின் கீழுள்ள வயல் நிலங்களிலேயே இவ்வாறு மண்கள் கொட்டப்பட்டு வேலிகள் போடப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்ற சமயத்தில் வவுனியா கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் 2011 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்தி சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 2000ஆம் ஆண்டு 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 83 ஆம் பிரிவின் பிரகாரம் கட்டளை பிறப்பிக்கப்பட்டு இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் தற்போது எவ்வித நடவடிக்கைகளும் உரிய அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக விவசாயம் செய்வதற்கான நிலங்கள் இல்லாமல் போகின்ற நிலைமை வவுனியா மாவட்டத்தில் உருவாகுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் விவசாயிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் உடனடியாக இவ்விடயத்தில் தலையிட்டு குறித்த மண்கள் , வேலிகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். (அ)

## அரிசியின் விலை இனி 300 ரூபாயை தாண்டும்!

### நெல் ஆலை உரிமையாளர்கள்

கொழும்பு, ஜன. 25

இம்முறை பெரும்போக பருவத்தில் ஒரு கிலோ நெல்லுக் கான கொள்முதல் விலை 140-170 ரூபாயாக அதிகரித்திருப்பதால், எதிர்காலத்தில் ஒரு கிலோ அரிசி யின் விலை 300 ரூபாயை தாண்டக் கூடும் என்று சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

அண்மைய நாட்களில் ஒரு கிலோ கிராம் ஈர நெல்லின் விலை 115-120 ரூபாயாக அதிகரித்துள்ளதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

இருப்பினும், சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களுக்கு ஈரமான நெல் ஒரு கிலோகிராம் 95 ரூபாய்க்கும், உலர்ந்த நெல் ஒரு கிலோகிராம் 115 ரூபாய்க்கும் வாங்க கடன்கள் வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி, ஒரு கிலோ சம்பா நெல்லை 120 ரூபாய்க்கும், ஒரு கிலோ கீரிச் சம்பா நெல்லை 130 ரூபாய்க்கும் வாங்க கடன்கள் வழங்கப்படும் என்று அரசாங்க வட்டாரங்கள் கூறின.

இதற்கிடையில், நெல்லுக்கு உத்தரவாத விலை நிர்ணயம் செய்வதை அரசாங்கம் தொடர்ந்து தாமதப்படுத்தி வருவதாக விவசாயிகள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

தனியார் துறையினர் அதிக விலைக்கு நெல்லை கொள்முதல் செய்வதால், குறைந்த அளவில் நெல் வாங்க காத்திருக்கும் அரசாங்கத்துக்கு விவசாயிகள் நெல் விற்க முடியாது என கூறுகின்றனர்.

இதேவேளை, நாட்டில் உள்ள பல சிறிய அளவிலான நெல் ஆலைகள் நெல் கையிருப்பு இல்லாததால் மூடப்பட்டுள்ளன.

பல விவசாயிகள் நெல் விலையை உயர்த்தியுள்ளதால், அந்த விலையில் நெல்லை வாங்குவது, அரிசியை உற்பத்தி செய்வது மற்றும் அரசாங்கக் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்வது சாத்தியமில்லை என குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது. (அ)

## சலோச்சன கமகேக்கு பிணை!

கொழும்பு, ஜன. 25

9 மில்லியன் ரூபா கையூட்டுபெற்ற சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சலோச்சன கமகே மற்றும் இரண்டு சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகையை விரைவுபடுத்துவதற்காக தொழிலதிபர் ஒருவரிடமிருந்து 9 மில்லியன் ரூபாய் கையூட்டு பெற்ற சம்பவம் தொடர்பாக குறித்த சந்தேக நபர்கள் கையூட்டு மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org